"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம் : 1876

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

### காவலன் சிறப்பு மலர்

பொதுச்சங்க ஆரம்பவிழாவின் ஞாபகமாக காவலன் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட விருக்கிறது. இது சம்பந்தமான கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றை எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கிரேம்.

நிர்வாக ஆசிரியர்,
"பாதுகாவலன்" அலுவலகம்,
மேற்றிராசன இல்லம்,
யாழ்ப்பாணம்.

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு புரட்டாதி மீ 15-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 10 | 37-ம் இலக்கம்

# குரோதமும் கோபமும் எங்கள் ஆயுதங்களல்ல

## அதிமேற்றிராணியார் கூறுகிறர்



இகலோக கருமங்களின் பளபளப்பினுலே உண்மைப் பார்வையை இழந்திருக்கும் எங்கள் விரோதிகள் திருச்சபைக்கு எதிராகப் பிரச்சாரப்போர் நடத்திக் கொண்டே வருகிருர்கள். ஆயின் குரோதமும், கோபமும் கத்தோலிக்கரின் ஆயுதங்கள் அல்ல என்பதைத் தெளிவாகக் கூறுகிரேம். இவர்கள் எங்கள்மேல் குவிக்கும் அபாண்டங்கட்கு நாங்கள் கொடுக்கவேண்டிய பதில் உண்மையான கிறிஸ்தவ அன்புதான் எனக் கொழும்பு அதிமேற்றிராணியார் பேரருட் பெருந்தகை தோமஸ் கூறே ஆண்டவரவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நீர்கொழும்புப்பகுதி மரியாயின் சைனியத்தார் ஒழுங்குசெய்துள்ள யூபிலிவிழா வைபவத்தின் இறுதி நிகழ்ச்சியான மாபெருங் கூட்டத்தில் சொற்பொழிவு நிகழ்த்திய அதிமேற்றிராணியாரவர்கள் மேலும் கூறியதாவது :

உலக குடிசனம் விரைவாக அதிகரித்து வருவதால் கத்தோலிக்க திருச்சபையின் சொற்ப குருமாரால் தங்கள் பெருவாரியான மந்தைகளைக் கண்காணிப்பது கடினமாகி வருகிறது. எனவே, இல்லறத்தோரின் உதவி அவர்கட்கு அவசியம். கத்தோலிக்க திருச்சபையை மனித சரீரத்துக்கு ஒப்பிடின் அதன் சிரேஷ்டர்களும், மற்றும் கிறிஸ்தவர்களும் அச்சரீரத்தின் முக்கிய அங்கங்களாக இருக்கின்றுர்கள். எனவே, இல்லறக் கிறிஸ்தவர்கள் பலர் குருமாருக்கு உவியாக கத்தோலிக்க சேவையைச் செய்ய முற்படும்போது அனுவசியமாக அரசியல் காரணங்களைப் புகுத்துவது மனிதாபிமானமற்ற செயலாகும்.

## இலங்கையின் ஆயர்கள் பொதுச் சங்கத்துக்குச் செல்கின்றனர்

அடுத்துவரும் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் கலந்துகொள்வதற்கென இலங்கையின் ஆயர்களும் பிரயாணத்தை ஆரம்பித்துள்ளனர். கடந்த வாரத்தில் சிலாபமேற்றிராணியாரான மேன்மைதங்கிய எட்மன்ட் பீரிஸ் ஆண்டவரவர்களும், கண்டி மேற்றிராணியாரான மேன்மைதங்கிய லீயோ நாணயக்கார ஆண்டவரவர்களும் விக்ரோறியா என்னும் கப்பலில் தங்கள் உரோமைப் பிரயாணத்தை ஆரம்பித்துவிட்டனர். சென்ற திங்கட்கிழமையன்று திரிகோணமலை மேற்றிராணியாரான மேன்மைதங்கிய இக்னேசியஸ் கிளெனி ஆண்டவரவர்கள் வியற்னும் என்ற கப்பலில் பிரயாணத்தைத் தொடங்கினர். கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய தோமஸ் கூறே ஆண்டவரவர்கள் இம்மாசம் 22-ந்திகதியளவில் ரோமைப் பிரயாணத்தை ஆரம்பிப்பார்.

## மகாசயஸே கௌரவத்தைப் பெறும் கன்னிகை

அண்மையில் பாரதப்பிரதமரின் புகழ்மாலையைப்பெற்ற இந்திய தருமசபைக்கன்னியர் குழுபற்றி பாதுகாவலனில் செய்தியறிக்கையொன்று தரப்பட்டதல்லவா? அக்கன்னியர் சபைச் சிரேஷ்டரான தெரேசா தாயாருக்கு 1962-ம் ஆண்டுக்கான மகாசயஸே வெகுமதி கிடைத்துள்ளதெனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸ் தேசத்தின் முன்னுள் ஜனுதிபதி மகாசயஸே அவர்கள் 1957-ல் ஒரு விமான விபத்தின்போது மரணமடைந்தார். அன்னுரின் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் பொதுசனத் தொண்டில் சிறந்தோருக்கு மகாசயஸே கௌரவப்பதக்கமும் 10,000 டாலர் பரிசும் வழங்கப்படுகிறது. நோபல் பரிசு, புலிட்சர் பரிசு முதலியவற்றின் வரிசையில் மகாசயஸே கௌரவமும் சர்வதேச மதிப்பைப் பெற்றுவருகின்றது.

யூகோசிலாவியாவைத் தமது பிறப்பிடமாகக்கொண்ட தெரேசா அன்னை இந்தியாவில் கல்கத்தா பகுதியில் பின் தங்கிய மக்களிடையே அன்பும், ஆதரவும் அளிக்கும் பணியில் கடந்த 30 வருடங்களாக உழைத்து வருகிறுர். 1948-ல் காலஞ்சென்ற பன்னிரண்டாம் பத்திநாதத்தந்தை தெரேசா அன்னை தமது சொந்தமாக தருமசபைக்கன்னியர்நிவாசமொன்றைத்தொடங்குதற்கு உத்தாரமளித்தார். இன்று இச்சபையில் ஒரு அ[illegible] ஜேர்மனியரு[illegible] னியர்கள் உள்ளனர். இக்கன்னியர்கள் கல்கத்தா, டெல்கி, ஆக்ரா, பம்பாய் ஆதியாமிடங்களில்

[ 5-ம் பக்கம் பார்க்க ]

### அங்கிளிக்க அதிமேற்றிராணியார் பாராட்டுகிறுர்

பிரமாதம், வெகு பிரமாதம் எனப்பாராட்டினுர் கேப்ரவுண் நகரின் அங்கிளிக்க அதிமேற்றிராணியார் வந்தனை.க்குரிய ஜோஸ்ற் தே பிளாங். அண்மையில் தெலிவிஷன் காட்சியொன்றில் இவர் பேட்டியளித்துப் பேசும்போது தென்னுபிரிக்காவில் அநீதிகட்கெதிராகக் கத்தோலிக்க திருச்சபை எடுத்து வரும் நடவடிக்கைகளையே இவ்விதம் பாராட்டினுர். தென்னுபிரிக்காவில் அங்கிளிக்க மதமும், கத்தோலிக்க மதமும் மிக நெருங்கிய நட்புக்கொண்டுள்ளன எனவும் இவர் குறிப்பிட்டார்.

## இளம் இயக்குநர் தயாரிக்கும் கத்தோலிக்க திரைப்படம்

இலங்கையின் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநரான இளைஞர் ரொபின் தம்பு ஒரு கத்தோலிக்க திரைப்படத்தைச் சிங்களமொழியில் தயாரிக்கவிருக்கிறுர். இலங்கையில் கத்தோலிக்க திரைப்படங்கள் நல்ல வரவேற்பைப்பெற்றுள்ளன என இவர் கருத்துத் தெரிவித்துள்ளார். ரொபின் தம்பு தயாரித்துள்ள சிங்களமொழித் திரைப்படங்கட்கு இலங்கையில் அமோகமான வரவேற்புக் கிடைத்துளது. மருதமடுவில் பக்தர் ஒருவர் செய்த நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக இப்படம் தயாரிக்கப்படவிருக்கிறது. தயாரிப்புச் செலவனைத்தையும் மேற்குறிப்பிட்ட பக்தர் கொடுத்துதவுவாரெனத் தெரிகிறது.

## தமிழில் இசைக்கப்பட்ட கீதத்தைப் பாராட்டினுர் பரிசுத்த தந்தை

தேவதாய் பரலோகத்துக்கு ஆரோபணமான திருநாளன்று விசுவாசப்பரப்புதற்கழகப் பயிற்சிக்கூடத்துக்குப் பரிசுத்த தந்தை விஜயஞ் செய்தபோது அங்கு [illegible] இந்திய மாணவர் [illegible]மொழியில் வரவேற்புக் கீதம்பாடித் திருச்சபைத் தலைவரை வரவேற்றுர்கள். கீதத்தின் மொழிபெயர்ப்பு பரிசுத்ததந்தையிடம் அளிக்கப்பட்டிருந்தது. தமிழிசையை வெகுவாக ரசித்தார் அருளப்ப ஆண்டகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும்செய்தி

தாண்டவன்வெளிச் செய்தி

## சின்னமடுவில் ஆண்டுவிழா

கிழக்கிலங்கையில் (மட்டக்களப்பு—தாண்டவன்வெளிப் பங்கைச்சேர்ந்த) ஆயித்தியமலைக் காட்டினில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் பரி. சதாசகாயமாதாவின் திருநாட்கொண்டாட்டம் புரட்டாதிமாதம் 2.ம்நாளில் நடந்தேறியது. இந்ததிருநாள் ஒரு பெரும் விழாபோன்ருகிவிட்டது. பக்தர்கள் கடந்தவருடங்களைப் பார்க்கிலும் பலஆயிரம் கூடுதலாக இப்பதியில் தேங்கியிருந்தனர். கொழும்புப் பகுதிகளிலிருந்து வண. பிதா அன்று பீற்றர், ஓ.எம்.ஐ. அவர்கள் தலைமையில்வந்தஒரு பெரிய யாத்திரைக்கோஷ்டி இத்திருநாளில் முக்கியபங்கெடுத்துச் சிறப்பித்தது. இப்பதியில் யாத்திரிகர்களின் தேவைக்காக, தற்காலிகதபாற்கந்தோர், பொலிஸ்நிலையம், விசாரணைக்கந்தோர், கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழ், சிங்களம், ஆங்கிலத்தில் வணக்க வழிபாடுகள், பிரசங்கங்கள் செய்யப்பட்டன. திருநாளுக்கு முன் மூன்று தினங்களில் மிகச் சிறப்பாகவும் பக்தி பற்றுதலுடனும் வேண்டுதல்கள் நடந்துகொண்டிருந்தன.

31-8-62 அன்று வெள்ளிக்கிழமை, பிற்பகல் திருமணித்தியாலஆராதனை, பிரசங்கம், திவ்வியபூசைஎன்னும் பக்தி முயற்சிகளில் பக்தர்கள் கலந்துகொண்டனர். அடுத்தநாளாகிய சனிக்கிழமை மாதத்தின் முதற்சனி. அன்று தினம் விசேஷ செபதினமாக அனுட்டிக்கப்பட்டது. குறிப்பிட்டவேளைகளில் மூன்றுபாஷைகளிலும் சதாசகாயமாதாவின் நோவனை நடைபெற்றது. பிற்பகல் 6-30 மணியளவில் திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாக மெழுகுவர்த்திகளுடனும், உரிய வைபவங்களுடனும் வீதிவலம் வந்து ஆலயத்தைச்சேர்ந்ததும் தமிழில் வண. பிதா அலோசியஸ் செலர் அவர்களாலும், சிங்களத்தில் வண.பிதா அன்று பீற்றர் அவர்களாலும் பிரசங்கங்கள் சொல்லப்பட்டன. அதன்மேல் மகத்தான மாலையாராதனை இருகுருமார் உதவிபுரிய, திரிகோணமலைப் பகுதி விக்கார்ஜெனறல் வண. பிதா ஜெறோம் டிசா அவர்களால் பாடப்பட்டு சற்பிரசாதஆசீர்வாதமும், திருச்சுரூப ஆசீர்வாதமும் அருளப்பட்டது. திருநாள்தினம் விடிந்தது. தொடர்பாகப் பூசைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. திருநாட்பூசை பாடற் பூசையாக, திருப்பதிப் பரிபாலகர் வண. பிதா ஜி. ஈ. எல். வம்பேக் அவர்களால், வண. பிதா அன்று பீற்றர், ஓ.எம்.ஐ., வண. பிதா றெக்ஸ் ஒக்கஸ் துணைபுரியச் சொல்லப்பட்டது. பூசைமுடிவில் திவ்வியநற்கருணைச் சுற்றுப்பிரகாரம் ஆலயத்தைச்சுற்றிவந்ததும், "தெதேயும்" தோத்திரப்பாடலும், தேவமாதாவுக்கு ஒப்புக்கொடுத்தல், சற்பிரசாத ஆசீர்வாதம், நோயாளரை ஆசீர்வதித்தல் என்னும் பக்திமுயற்சிகளும் நடந்துகொண்டிருந்தன. அதன்மேல் சதாசகாயமாதாவின் திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாகக் கொடிமரத்தண்டைகொண்டுவரப்பட்டு மாதாவின் கொடி இறக்கப்பட்டதுடன் திருநாள் முடிவுக்குவந்தது.

திருநாட்தினங்களில் நேர்கடனுக்காகச் சேர்ந்தபொருட்களின் விற்பனவு மிக்கபரிமளிப்பாக நடந்துகொண்டிருந்தது. யாத்திரிகர்களுக்குஅன்னதானம் வழங்கப்பட்டது. திருநாளின் மூன்று தினங்களிலும் கொழும்புப்பகுதி யாத்திரிகர்கள் பாடல், செபங்களில் விசேஷ பங்கெடுத்துக் கொண்டதுடன் தங்கள் சகலவசதிகளையும் மறந்து கஷ்டங்களை மேற்கொண்டு திருப்பதிப்பரிபாலகரதும் யாத்திரைக்கோஷ்டித் தலைவரதும் பாராட்டுகளையும்பெற்றனர். நடந்தேறவிருக்கும் வத்திக்கான் பொதுச்சங்கத்துக்காகவும், தேவஅழைத்தலுக்காகவும் இத்திருப்பதியில் விசேஷ வேண்டுதல்கள் செய்யப்பெற்றன.

இத்திருப்பதியானது கடந்த 7 ஆண்டுகளில் தீவிரவளர்ச்சி பெறுவதைக்காண்கையில் மாதாவின் அருள் அமோகமாகக் கிடைப்பதென்றே சொல்லலாம்.

திருநாளைச் சிறப்பிக்கும்படி வந்திருந்த யாத்திரைக்குழுவினர்க்கும், நமது திருமலை ஆயர்அவர்கட்கும், திருப்பதிபரிபாலகர் சுவாமிகட்கும், தேவதிரவிய அனுமானமருளுவதிலும் மற்றும் வேண்டிய துணைபுரிந்த குருப்பிரசாதிகட்கும், பக்தர்கட்கும், மற்றும் அனைவர்க்கும் சதாசகாயமாதாவின் அருள்என்றும் இருப்பதாக!

—நிருபர்.

கம்பளை

## குருத்துவ வெள்ளிவிழா

கம்பளைப் பங்கில் தொண்டுபுரிந்து வரும் வணக்கத்துக்குரிய பிதா பொன்னுசுவாமி அவர்கள் குருத்துவ அபிஷேகம் பெற்ற இருபத்தைந்தாவது வெள்ளிவிழா சென்ற ஞாயிற்றுக்கிழமை 2-ம் திகதி வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றையதினம் மகாவந். லீயோ நாணயக்காரா ஆண்டகை அவர்கள் சமூகம் தந்து விழாவைச் சிறப்பித்தார். யூபிலி நாயகர் அவர்கள் 11மணிக்கு தமது யூபிலிப்பூசையை ஒப்புக்கொடுத்தார். பின்பு 4 மணியளவில் கன்னியர்மட மண்டபத்தில் கூட்டமொன்று கூடி அதற்குச் சமூகமளித்த அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. யூபிலிநாயகருக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டபின் அவரின் ஆத்ம சேவைகளைப்பற்றி ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்றுபாஷைகளிலும் வாழ்த்துபசாரம் கூறப்பட்டது. அதன்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துடன் விழா இனிதே முடிவடைந்தது. யூபிலி நாயகர்அவர்கள் இன்னும் பலவருடங்கள் சேவைபுரிய வேண்டிய அருளையும், நற்சுகத்தையும், நீடியஆயுளையும் கொடுத்துக் காப்பாற்ற இறைவனைப் பிரார்த்திப்போமாக.

—நிருபர்.

## பறண் நட்டகல்

வவுனியா — யாழ்நகர் பாதையில் நொச்சிமோட்டைப் பகுதியிலிருந்து ஏறக்குறைய இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள சிறுகிராமமே பறண் நட்டகல் என்னும்பெயருடன் விளங்குவது. வனவிலங்குகள் நிறைந்த அடர்ந்த கானகத்தின் மத்தியில் பதினைந்து குடும்பத்தினர் வசிக்கிறார்கள். உழுதுண்டு வாழ்வதே அவர்கள் லட்சியம். வவுனியாமாவட்டத்தைச் சேர்ந்த ஆசிகுளம், பெரிய குமரேசன்குளம், புதுக்குளம், சாளம்பன் முதலாம் இடங்களில் வசிப்பவர்களும் இவர்கள் உறவினரே.

நீர்ப்பாச்சலுக்குதவும் குளமும், குளக்கட்டின் அண்மையில் பாரிய கற்பாறையுமொன்றுளது. அக்கற்பாறையின் மத்தியில் புராதனமக்கள் வெள்ளப்பெருக்கிலிருந்து தம்மைக் காப்பாற்றும்பொருட்டு, கற்களினால் பறண் கட்டி அதில் வாழ்ந்ததாகவும் அதனாலேயே இவ்விடத்திற்குப் "பறண் நட்டகல்" என்றுபெயர் வழங்கியதென்றும் ஒரு பாரம்பரியமுண்டு. கற்கள் காட்டப்பட்ட குழிகளை இப்பொழுதும் காணலாகும்.

கிராமத்தின் மத்தியில் கோவைக் குருமாரால் அடியிடப்பட்டதான பரிசுத்த அடைக்கல நாயகியின் சிறு ஆலயம் ஒன் [...] சொற்பதொகையினர [...] வவு

னியாப் பங்கைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் அங்கு வருஷாவருஷம் கூடி அன்னையின் சென்ன விழாவைப் புரட்டாசித் திங்கள் எட்டாம்நாள் மிக்க பக்திச்சிறப்புடன் கொண்டாடிவருவர்.

வழமைப்பிரகாரம் இம்முறையும் கொடியேற்றத்துடன் நவதின ஆராதனைகளோடு சென்ற 8-ந் திகதி காலை திவ்விய பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும் பின்னர் வண. கட்டளைக்குரவரின் நன்றியுரையுடன் திருச்சுரூப ஆசீர்வாதமும் நடைபெற்றுத் திருநாள் இனிதே முடிவாயது.

நிருபர்.

# பேசும் பேனு

### அற்புதங்கள்

அற்புதங்களென்றால் என்ன? அவற்றை இறைவன் அருளுவது எதற்காக? அற்புதங்கள்பட்டில் கத்தோலிக்க திருச்சபையின் கொள்கைகள் யாது? என்பவற்றைத் தெளிவாக அறியவேண்டின் பண்டத்தரிப்பு, புனித ஜசிந்தா பாடசாலையில் எதிரேவரும் 16-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-15 மணி தொடக்கம் நடைபெறவிருக்கும் பத்திரிசிய இயக்கத்தில் கலந்துகொள்ளுங்கள். அங்கு அற்புதங்கள் என்னும் பொருள்பற்றிக் கலந்துரையாடல் நடைபெறும். உரையாடலைத் திரு. எஸ். எம். ஜே. லூயிஸ் ஆரம்பித்து வைப்பார். வண. வில்லியம் யேசுதாசன் சுவாமிகள் கலந்துரையாடலை நடாத்துவார். பண்டத்தரிப்பு சகாய நாயகி சைனியத்தினரின் மூன்றாவது பத்திரிசிய இயக்கக் கலந்துரையாடல் இதுவென அறிவிக்கப்பட்டுள்ளது.

### பிரமுகர்கள் யாவர்?

1. வத்திக்கானில் உள்ள வானொலி நிலையத்தை நிறுவிய விஞ்ஞானி மார்க்கோனி என்பவர். வானொலியைக் கண்டுபிடித்தவரும் இவரேதான் என்பது இங்கு குறிப்பிடுதற்குரியது.

2. முதலில் அவ்வானொலியில் பேசியவரும் மார்க்கோனிதான்.

3. வத்திக்கான் வானொலியில் பேசிய பாப்பாசர் பதினொராம்பத்திநாதராவர்.

4. தெலிவிஷன் எனப்படும் தொலைக்காட்சியில் முதலில் தோன்றிய திருச்சபைத் தலைவர் பன்னிரண்டாம் பத்திநாத பாப்பாசர்.

### தேவாலயமும் மரியாதையும்

வார இறுதியை இன்பமாகக் கழிக்க சில நண்பர்களுடன் வலித்தூண்டலுக்குச் சென்றிருந்தேன். கோவிலில் தங்குவதற்கும் பக்கத்தில் சமைப்பதற்கும் முதலில் அனுமதி கிடைக்கவில்லை. இதுபற்றிக் கோவிலின் பக்கத்திலுள்ளவர்களே விளக்கினார்கள். கத்தோலிக்கர்கள் பலர் ஓய்வுதினங்களைக் கழிப்பதற்காக இக்கோவிலண்டை செல்லும்போது அங்கு தேவாலயத்துக்குச் செலுத்தவேண்டிய மரியாதைகளை மறந்து வாடிவீடுபோலத் தேவனின் மாளிகையைப் பாவிக்கிறுகளாம். பலர் மதுபானப்பொருட்களையும் தாராளமாகக் கோவிலண்டையில் பாவித்தபின் மரியாதைக்குறைவாக நடந்துகொள்வதனால் பல சச்சரவுகட்கும் வழியாகின்றதாம்.

எனினும் எம்மையறிந்த அம்மையாரொருவர் எமக்காகப் பரிந்துபேசிக் கோவிலின் பக்கத்தில் நாம் தங்க வழி வகுத்து உதவினர். ஆலயங்கட்கு யாத்திரையாகச் செல்லும் கத்தோலிக்கர்கள் இந்த நிகழ்ச்சியை மனதில் கொள்வார்களாக. தேவனின் ஆலயத்தை அனுசாரமாக நாமே மதிப்பின் கத்தோலிக்கரல்லாதவர்களிடம் மரியாதையை எதிர்பார்ப்பதெங்ஙனம்?

### ஞானோபதேச வகுப்பு

மாலை நான்குமணியடித்தபோது நாம் மேலே குறிப்பிட்ட தேவாலயத்தில் அதிசய காட்சியொன்றைக் கண்டேன். ஆலய விறாந்தையில் சுமார் ஐம்பதுக்குமதிகமாக குழந்தைகள், இளைஞர்கள், சில வயதுவந்தவர்கள் ஒன்றுகூடினார்கள். எமக்கு உதவிய அந்த அம்மையார் அவர்கட்கு ஞானோபதேச வகுப்பொன்று நடாத்தினர். ஞாயிறு தப்பாது இந்தவகுப்பு நடைபெறுகிறதாக எனக்குக் கூறப்பட்டது. தமது வயதான காலத்திலும் தளர்ச்சியுறாது சேவையாற்றும் இந்தமரியாயின் சைனியச் சகோதரியின் சேவைகள் எனக்கு எடல் குயினை ஞாபகமூட்டின.

### இவ்வார வினுக்கள்

1. திவ்விய நற்கருணைக் கவிஞர் என அழைக்கப்படும் புனிதர் யார்?

2. நற்கருணையின் பாப்பு என அழைக்கப்படுபவர் யார்?

3. இப்பாப்பாசர் நற்கருணைப்பக்தி அதிகமாவதற்கு எடுத்த நடவடிக்கைகளுக்கெல்லாம் ஆலோசனையும், ஒத்துழைப்பும் அளித்த கர்தினல் யார்?

### உங்களுக்குத் தெரியுமா?

தபால் தலைகளில் பல பிரமுகர்களின் உருவப்படங்களையும் வெளியிட்டு அவர்களைக் கௌரவிக்கிறார்களல்லவா? எங்கள் பரிசுத்த தேவதாயையும் இவ்விதம் பல அரசாங்கங்கள் தபால் தலைகளில் வெளியிட்டுக் கௌரவித்துள்ளன.

1920-ம் ஆண்டு பங்குனிமாதம் முதலாந்தேதி பவேரியா தேவதாயைப் பெருமைப்படுத்தும் வணணம் முதற்தடவையாக தபால்தலையொன்றை வெளியிட்டது. முதலாவது மாக்சிமிலன் புரொட்டஸ்தாந்து அரசரொருவருடன் பொருதி வெற்றியீட்டிய தன் 300-வது ஆண்டுவிழாவைக்கொண்டாடுமுகமாக இத்தபால் தலையை வெளியிட்டனர். பவேரியாவின் பாதுகாவலர் என்ற அட்சரங்களுடன் தேவதாய் குழந்தையேசுவை ஏந்தியபான்மையாக இதில் சித்திரிக்கப்பட்டுளது.

### நகைச்சுவை

அமலன்: என்ன எழுதுகிறாய்?

விமலன்: தந்தையாருக்கு ஒரு லிகிதம் வரைகின்றேன்.

அமலன்: ஏன் மெதுவாக எழுதுகிறாய்?

விமலன்: தந்தையார் லிகிதங்களை மெதுவாகத்தான் படிப்பார்.

* * *

பாலா: நீ உண்ணும் 'கேக்' மிக ருசிகரமானதென எண்ணுகிறேன்.

நீலா: எப்படி அறிந்தாய்?

பாலா: என் வாயில் ஜலம் ஊறுகிறது.

நீலா: இந்தக் கைக்குட்டையால் வாயைத் துடைத்துக்கொள். அதற்குள் கேக்கைத் தின்றுமுடித்து விடுகிறேன். அப்புறம் ஜலம் ஊறமாட்டாது.

---

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இருதய இரக்கத்தாலும், அர்ச். சகாயமாதாவின் உதவியாலும், ரேச் ஆண்டவரின் வேண்டுதலாலும், மற்றும் சகல அர்ச்சியசிஷ்டர்களின் மன்றாட்டாலும் எனது மகனை ஒரு வியாபாரத்தில் நிலைநாட்டியதற்காகவும், மேலும் அவனைக் குடும்பமாக்கியதற்காகவும் நன்றி செலுத்துகிறேன்.

M. R. Gromez,
23, Chetty Street, Puttalam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## நெற்காணிச் சட்டம்

அடுத்துநிகழும் 1963-ம்ஆண்டுமுடிவதற்குள் நெற்காணிச்சட்டத்தை இலங்கையின் சகலபகுதிகளிலும் நடைமுறைக்குக் கொண்டுவரக் காணி-விவசாயமந்திரி முடிவுசெய்திருக்கின்றார். ஆனால், அதற்குமுன் கடந்தமூன்று வருடகால அனுபவத்திலும் நெற்காணிச்சட்ட நடைமுறைநிர்வாகத்தில் கண்டறியப்பட்டுள்ள சகலகுறைபாடுகளையும் நிவிர்த்திசெய்வதற்காக அதன் திருத்தமசோதாவொன்று பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

## ஒருமாணவன் ஒருரூபா

தேசியசேமிப்பு இயக்கத்தின் ஆதரவிலே திருகோணமலை மாவட்டச் சேமிப்புச்சபையானது "ஒருமாணவன் ஒருரூபா" என்ற இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறது. இதன் நோக்கம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஒவ்வொருமாணவனுக்கும் சிக்கன உணர்ச்சியை உண்டுபண்ணுவதேயாகும். இந்தஇயக்கம் பத்துவாரங்களுக்கு மேற்படாது இயங்கிவரும். இதில்சேரும் ஒவ்வொருமாணவனும் வாரந்தோறும் குறைந்தபட்சம் பத்துச்சதம் கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுத்துவந்தால் பத்தாவதுவாரத்தில் அத்தொகை ஒருரூபாவாகும். பின்னர் இந்தப்பணம் தபாற்கந்தோர்ச் சேமவங்கிச் சேமிப்புப்புத்தகத்தில் அல்லது மாணவன்பெயரில் புதிதாக ஒருபுத்தகத்தில் போட்டுவைக்கப்படும்.

## இரட்டைக் கொலைவழக்கு

யாழ்ப்பாணம், மாட்டீன்வீதி இரட்டைக்கொலைவழக்கில் எதிரியான சிம்பிள்ளன அறியப்படும் குணரத்தினத்துக்கு யூரிமாரின் ஏகமான தீர்ப்பின்பேரில் மரணதண்டனை விதிக்கப்படலாயிற்று. யாழ்ப்பாணத் தபாற்கந்தோரிலே ஒருதற்காலிக தந்திச்சேவகனுகக் கடமையாற்றிவந்த எதிரி மரியதாஸ், துரைராசா எனும் இருசகோதரரை வெட்டிக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருந்தது. வருகிற ஐப்பசிமாதம் 11-ந்திகதியன்று போகம்பரைச் சிறைச்சாலையிலே எதிரி தூக்கிலிடப்பட வேண்டுமென்றும் தீர்ப்பாயிற்று.

## செல்வந்தருக்கும் காணிகள்

அரசாங்ககாணிகள் பிறருக்குக் கொடுபடும்போது நடுத்தரவகுப்பினருக்கும், செல்வந்தருக்குத்தன்னும் வழங்கப்படவேண்டுமென்று காணிமந்திரி உத்தரவிட்டிருக்கின்றார். காணியில்லாத ஏழைகளுக்குமட்டும் காணிவழங்குவதில் பயனில்லை; காணியில்லாத ஏழைக்குடியேற்றகாருக்குப் பத்துக்கோடி ரூபாசெலவில் ஆறுஇலட்சம் ஏக்கர் காணி வழங்கப்பட்டிருக்கிறது; ஆயினும் இதனுல் எத்தகையபயனும் ஏற்படவில்லை; ஏழைகளாகச்சென்று காணிகளை ஒப்புக்கொண்ட இவர்கள் இன்னும் ஏழைகளாகவே இருக்கிறார்கள்; ஆகவே, செல்வந்தர்களுக்கும் காணிவழங்குவதால் உற்பத்திபெருக வழியேற்படுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

## சவ்வரிசித் தொழிற்சாலை

ஓமந்தையிலே சவ்வரிசித் தொழிற்சாலையொன்று விரைவிலே திறக்கப்படவிருக்கிறது. இதற்குரிய ஆரம்பஏற்பாடுகள் பூர்த்தியடைந்துவிட்டன. சவ்வரிசித்தொழிலுக்குத் தேவைப்படும் மூலப்பொருளான மரவள்ளியை வடபகுதியிலும், ஏனைய விடங்களிலும் கூடுதலாக உற்பத்திசெய்வதற்குவேண்டிய ஒழுங்குகளும் செய்யப்படவிருக்கின்றன.

## கடற்தொழில் விருத்தி

"இந்தஅரசாங்கம் பதவிக்குவந்ததிலிருந்து கடற்தொழிலிலோ அல்லது கடற்தொழிலாளரின் வாழ்விலோ முன்னேற்றம்எதுவும் காணப்படவில்லை; இலங்கையைச் சூழவரவுள்ள கடல்களிலே பெருமளவில் மீன்கள்கிடைக்கும்போது அரசாங்கம் தகரடப்பாக்கவில் அடைக்கப்பட்டமீன்களை இறக்குமதிசெய்ய வருடந்தோறும் ஒன்பதுகோடிரூபா செலவிடுகிறது; கடற்தொழிலை நவீனமுறையில் விருத்திசெய்வதன்மூலம் பொருளாதாரத்தை விருத்திசெய்யலாம்; ஆகவே, கடற்தொழிலை விருத்திசெய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று சென்ற 8-ந்திகதியன்று வெண்ணப்புவாவின் சென்பீற்றேர்ஸ் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கவிழாவில் பேசியபோது நீர்கொழும்பு முன்னுள் எம். பி. டக்ரர் ஹெக்ரர் பெர்ணண்டோ கூறலாயினர்.

## மருதமடுத் திருப்பதி யாத்திரை

நமது அச்சகத்தைச்சேர்ந்த பணியாளர்கள்அனைவரும் தங்கள் அதிபர் சுவாமியவர்கள் தலைமையிலே சென்ற 13-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் பஸ்மூலம் மருதமடுத்திருப்பதிக்கு யாத்திரைபோயிருக்கின்றார்கள். அவர்கள் அத்திருப்பதியில் தங்கியிருக்கும் முத்தினங்களையும் ஒருஞானவொடுக்ககாலமாகப் பயன்படுத்தி ஆத்மீகலன் பெற்று, 16-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் திரும்பவும் யாழ்ப்பாணம் வந்துசேருவார்கள். மடுத்திருப்பதிக்கு இவர்கள் நடத்தியுள்ள இரண்டாவது திருயாத்திரை இதுவாகும்.

## பாடசாலைஎன்றால் என்ன?

கண்டி, தர்மராஜகல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா சென்ற 9-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை நடந்தேறியது. அவ்விழாவிலே பிரதமர் சிறிமா உரைநிகழ்த்தியபோது: நாட்டின் நலனுக்கும், முன்னேற்றத்துக்குமாக ஒவ்வொருபிரசையும் தியாகஞ்செய்யத் தயாராயிருக்கவேண்டும்; நாட்டில் ஒழுக்கமின்மை நிலவிவருவதுவருந்தத்தக்கது; பாடசாலைகளிலும் ஒழுக்கமின்மை இருந்துவருகிறது; நற்பிரசைகளாக வளரவும், ஒழுக்கமுடையவர்களாகத் திகழவும், தியாகஞ்செய்யவும் பழகிக்கொள்வதற்கேற்றஇடம் பாடசாலையேயெனக் கூறியுள்ளனர்.

## சிவிலுத்தியோக சேவை

சி. சி. எஸ். என்று இதுகாலவரை அறியப்பட்டுவந்த இலங்கைச்சிவிலுத்தியோகசேவை விரைவிலே ஒழிக்கப்படவிருக்கிறது. இது ஒழிக்கப்படுவதை அரசாங்கம் கொள்கையளவில் அங்கீகரித்துள்ளது. இதற்குப்பதிலாக ஐக்கியநிர்வாகசேவையை அமைக்கவேண்டுமென்று ஏற்கனவே கருத்துத்தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சாரணச் சிறுவர்கள் வாரம்

இலங்கைச் சாரணச்சிறுவர் சங்கமானது இம்மாதம் 23-ந்திகதி முதல் 30-ந்திகதிவரையிலுள்ள ஒருவாரத்தையும் சாரணச்சிறுவர்கள் வாரமாகக் கொண்டாடுவதெனத் தீர்மானித்திருக்கிறது. 24-ந்திகதியன்று அவர்கள் பழமரங்களையும், மற்றும் பலன்தரும்மரங்களையும் நாடுமுழுவதிலும் நாட்டி "அதிக பயிரிடுக" என்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கு உதவிசெய்வார்கள். கிணறுகளையும், வீதிகளையும் சுத்தஞ்செய்வதிலும் சிலதினங்களைச் செலவழிப்பார்கள். நாடுமுழுவதிலுமுள்ள சாரணச் சிறுவர்களெல்லாம் இவற்றிலே கலந்துகொள்வார்கள்.

# அப்பா நீ போய்விடு

இரவு மணி பத்தடித்து ஓய்ந்தது. அந்தக் கிராமத்திலுள்ள வீடுகளெல்லாம் உறங்கிக்கிடந்தன. வீட்டு விளக்குகளெல்லாம் அணைந்துவிட்டன. ஆயினும், இறைவன் ஏற்றிவைத்த வான்விளக்குத் தண்ணொளி பரப்பிக்கொண்டிருந்தது. வீதியோரத்திலே ஒரு வீடு. அந்த வீட்டில் மட்டும் ஏதோ மங்கலான வெளிச்சம் எரிந்து கொண்டிருந்தது. மங்கிய விளக்கொளியின் அருகே ஒருமங்கை மடியில் ஒன்பதுவயது மதிக்கத்தக்க ஒரு சிறுமியையும் வளர்த்தியபடி வாசலையேபார்த்துக் கொண்டிருந்தாள். கடிகாரம் ஓடிக்கொண்டேயிருந்தது. சிறுமி உறங்கிவிட்டாள். அவள்மட்டும் உறங்கவில்லை. வாசலிலே ஓர் உருவம் தள்ளாடித்தள்ளாடி வந்துகொண்டிருந்தது. பரபரப்புடன் எழுந்தாள் அந்தப்பெண். பிள்ளையைப் பாயிற்கிடத்திவிட்டுச் சமையலறைக்குள் விளக்கேற்றித் தட்டில் சாதத்தை எடுத்துவைத்தாள். வந்தவன் வேறு யாருமல்ல, அவள் கணவன் அருள்தாஸ். நேராகச் சமையலறையில் நுழைந்தவன் தட்டைப்பார்த்துவிட்டு, "ஏய்! மரியா வாஇங்கே" என்று அவள் கையைப்பிடித்திழுத்து "இதுதானு சாப்பாடு" என்று சொல்லி அவள் கன்னத்திலறைந்துவிட்டுத் தட்டையும் சாதத்தையும் எடுத்து அவள் முகத்தில் வீசினுன். அவன்போட்ட சத்தத்தில் சிறுமி விழித்துக்கொண்டாள். "அப்பா அம்மாவை அடிக்காதீங்கப்பா" என்று ஓடிவந்து தன்தாயைக் கட்டிக்கொண்டாள். அப்போ அருள்தாஸ் எழுந்து தன்னறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டான். மரியா தன்மகளை அழைத்துக்கொண்டு தன் அறைக்குள் சென்று படுத்துவிட்டாள். அழுதழுது அவள் கண்கள் சிவந்திருந்தன. மகள் பிரேமா தன் பிஞ்சுக்கரங்களால் தாயின் கண்ணீரைத் துடைத்துவிட்டாள். தாயும் சேயும் அழுதுகொண்டே படுத்துறங்கிவிட்டனர். பொழுதுபுலர்ந்தது. மரியா எழுந்து காலையுணவு தயாரித்து மௌனமாகத் தன் கணவனுக்குப் பரிமாறினுள். அருள்தாஸ் அலுவலகத்துக்குப் போய்விட்டான். மகளையும் பள்ளிக்கனுப்பினுள். பிரேமா சமர்த்துப்பெண். நான்காம்வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். வகுப்பில் அவள்தான் முதலாவது. தன் தந்தையின் குடிவெறி நீங்கவேண்டுமென்று தினமும் கடவுளை வேண்டுவாள். வீட்டில் அம்மாவிடம் சமயபாட விளக்கங்களைக் கேட்டுத் தெளிந்துகொள்வாள். அன்று சாயந்தரம் மரியா தன்கடமைகளை முடித்துக்கொண்டு சமயநூல் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தாள். பிரேமாவும் பள்ளியிலிருந்து வீடு திரும்பிவிட்டாள். மரியா தான் வாசித்த புத்தகத்திலிருந்து சில விடயங்களைப் பிரேமாவுக்கு விளங்கப்படுத்திக்கொண்டிருந்தாள். அந்தநேரத்தில் அருள்தாஸ் ஆடிக்கொண்டே வீட்டில் நுழைந்தான். கண்ணிலே வெறி; கையிலே சாராயப்போத்தல். மரியா எழுந்து அறைக்குள்சென்றுவிட்டாள். மகள் பிரேமா ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக்கொண்டு "அப்பா! நீங்க ஏனப்பா இப்படித் தினமும் குடித்துவிட்டுவந்து அம்மாவை அழவைக்கிறீங்க. குடிவெறியும் பெரிய பாவமென்று எங்க ரீச்சர் சொன்னுங்களே அப்பா. அப்பா! இனிமேல் குடிக்காதீங்கப்பா" என்று கெஞ்சினுள். மகளை அணைத்துக்கொண்டிருந்தவன் திடீரென்று "நிறுத்தடி! அதிகப்பிரசங்கி; அந்தக் கழுதைதான் சொல்லித்தந்திருக்கிறுள். எங்கே அவள்?" என்று சொல்லி மரியாவின் கையைப் பிடித்துக்கொண்டு வந்து அவளை அடித்துக் கீழே தள்ளினுன். பிரேமா: "ஐயோ அம்மா" என்றலறிக்கொண்டே ஓடிச்சென்று தாயை அணைத்துக்கொண்டாள். அருள்தாஸ் இவைகளை லட்சியம் செய்ததாகவே தெரியவில்லை. அவனுக்கு வேண்டியது மது. மனைவி மக்களல்ல. அன்றிரவு மணி பன்னிரண்டு. பிரேமா அன்னையினருகில் படுத்து நல்ல தூக்கத்திலாழ்ந்திருந்தாள். மரியா தூங்கவில்லை...... பிரேமாவையே உற்றுநோக்கியபடி கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தவள் திடீரென அவளை முத்தமிட்டுவிட்டு, ஓசைப்படாமல் எழுந்து வெளியே வந்தாள். பக்கத்தறையில் அருள்தாஸ் நல்ல குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். இதற்கிடையில் பிரேமாவின் முகத்தில் ஏதோ விழுந்தது. பிரேமா திடுக்கிட்டுவிழித்துப்பார்த்தாள். அவள் வளர்த்த பூனைக்குட்டிதான் அர்த்த ராத்திரியில் அவளோடு விளையாடியது. மங்கலாக ஒளி வீசிக்கொண்டிருந்த அகல்விளக்கைத் தூண்டியவள் அம்மாவைக் காணுமல் திகைத்தாள். அவளுக்குக் கத்தவேண்டும்போலிருந்தது. ஆனால், அவள் கத்தவில்லை... அந்தச் சிறிய விளக்கைஎடுத்துக்கொண்டு வீட்டுக்குப் பின்புறமாக ஓடினுள். அங்கே மரியா அவசரமவசரமாகவிஷப் போத்தல் ஒன்றின் மூடியைத்திறந்துகொண்டிருந்தாள். பிரேமா "அம்மா" என்று கத்திக்கொண்டோடிவந்து போத்தலைத் தட்டிவிட்டாள். மரியா விடவில்லை. "பிரேமா என்னைத் தடுக்காதே! தினமும் இங்கே அணு அணுவாகச் செத்துக்கொண்டிருப்பதைவிட ஒருநாளில் சாவதுமேல்" என்று வெறிபிடித்தவள் போல் உளறினுள் மரியா. "அம்மா! தற்கொலைசெய்தால் நரகத்துக்குப் போவீங்கம்மா. வேண்டாமம்மா!" என்று தாயின் கரங்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினுள் பிரேமா. "இந்த நரகத்தைவிட அந்த நரகம் எவ்வளவோமேல் என்றுள் மரியா. "அம்மா தற்கொலை செய்வது சாவானபாவம் என்று நீங்கதானே எனக்குச்சொல்லித் தந்தீங்க. இப்போ நீங்கதானே அதைச்செய்துகாட்டிறீங்க. நீங்கள் நரகத்திலிருக்கும்போது நான் எப்படி அம்மா இங்கு இருக்கமுடியும். எனக்கும் கொஞ்சம் தாருங்கள். நானும் உங்களோடு நரகத்துக்கு வந்துவிடுகிறேன்" என்றுள் பிரேமா. மரியா திடுக்கிட்டாள். "ஐயோ நான் எவ்வளவு பெரிய தப்புச்செய்திட்டேன். என் குழந்தைக்கு நானே இடறலாக இருந்துவிட்டேன். பிரேமா! என் கண்ணே! என்னை மன்னித்துவிடம்மா. தற்கொலைசெய்வது பெரியபாவம்தான். நான் இனிமேல் அப்படிச்செய்யமாட்டேன்" என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போது அமலதாஸ் படுத்திருந்த அறை யன்னலுக்குள் ஓர் உருவம் நிற்பதுதெரிந்தது. மரியாவும் பிரேமாவும் அறைக்குள் வந்து படுத்துக்கொண்டனர்.

அந்தவீட்டில் நிலவிய அமைதியைக் கலைத்தது அமலதாஸின் விக்கல் சத்தம். மறுநாட்காலை ஏழுமணியாகியும் பிரேமா எழுந்திருக்கவில்லை. மரியா மகளின் நெற்றியைத் தொட்டுப்பார்த்தாள். அனலாய்க் கொதித்தது. ஓடிப்போய்க் கணவனை எழுப்பி விஷயத்தைச் சொன்னுள். அமலதாஸ் எழுந்து டாக்டர்வீட்டுக்கு ஓடினுன். பிரேமா கடுமையான காய்ச்சலில் "த[illegible]கொலைசெய்தால் நரகத்துக்குப் போவீங்கம்மா, வேண்டாமம்மா" என்று புலம்பிக் கொண்டிருந்தாள். மரியா முகத்தைப் பொத்திக்கொண்டு அழுதாள். டாக்டர் வந்து ஊசியேற்றியபின் பிரேமா கண்விழித்துப்பார்த்தாள். அமலதாஸ் தன் ஒரேசெல்வத்தைக் காப்பாற்றவேண்டுமென்று மனதிற்குள் கடவுளை வேண்டிக்கொண்டான். பிரேமா தந்தையையே உற்றுப்பார்த்தவள் "அப்பா நீ போய்விடு. நீ இருந்தால் அம்மா செத்துப்போயிடுவாங்க, நீ போய்விடப்பா" என்று

(தொடர்ச்சி 7-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செப அப்போஸ்தலசபை புரட்டாதி— 1962

**வேதபோதக கருத்து :** மிஷன் நாடு நாடுகளிலே கிறிஸ்துவின் விசுவாசத்துக்காகவும், திருச்சபைக்கு அமைதல் நிமித்தமும் வருந்துபவர் இவ்வித வேதகலாபனைகளை மனந்தளராது தாங்கிச்சுமக்க மன்றாடிக் கொள்வது.

**பொதுக்கருத்து :** திருச்சங்கம் ஒருவித இன்னல் இடையூறின்றி விரும்பியமுடிவடையவேண்டிக்கொள்வது.

## தினசரி பூசை வழிகாட்டி

### புரட்டாசி

| | | | |
|---|---|---|---|
| 15 | ச. | வியாகுலமாதா திருநாள் (வி. ம.) (அர்ச். நிக்கொதேமுஸ்) | [வெ] |
| 16 | ஞா. | இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தின் பின் 14-ம் ஞாயிறு (வி. ம.) | [ப] |
| 17 | தி. | காலதினம் | [ப] |
| 18 | செ. | அர்ச். குப்பேர்தீனோ சூசையப்பர் | [வெ] |
| 19 | பு. | சதுர்காலப் புதன் (அர்ச். யனுவாரியரும் தோழரும்) | [ஊ] |
| 20 | வி. | காலதினம் | [ப] |
| 21 | வெ. | அர்ச். மத்தேயு (சதுர்கால வெள்ளி) | [சி] |

# சத்தியவேத பாதுகாவலன்

**1962-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 15-ந் திகதி**

# ஆசியாவுக்கு ஒரு பொதுச்சந்தை

உலகம் உருண்டையானது. அது உருண்டுகொண்டே செல்கிறது. உலகில் நாளுக்குநாள் மாற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன. உலகில் வதியும் மனிதர்களும் அந்த மாற்றங்கட்கேற்கத் தம் வாழ்க்கை முறைகளையும் மாற்றியமைத்தல் அவசியமாகிவருகிறது.

இரண்டாவது உலகயுத்தம் பல மாற்றங்களையும் அகிலத்தில் புகுத்திவிட்டது. பகலவன் அஸ்தமித்தறியாத சாம்பிராச்சியம் என்ற பெருமையைப் பெற்றது பிரிட்டிஸ் சக்கராதிபத்தியம். காலப்போக்கை அனுசரித்த பிரித்தானி தனது காலனி நாடுகட்கெல்லாம் விடுதலை வழங்கியது. காமன்வெல்த் என்ற தலைப்பில் அந்நாடுகளை ஒருங்கே தனது பாதுகாவலில் வைத்திருந்தது.

காமன்வெல்த்முறை பிரித்தானியிடமிருந்து பல சலுகைகளை இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் முதலிய நாடுகட்குப் பெற்றுத் தந்தது. ஆயின், அன்றிருந்த நிலையில் பிரித்தானியா இன்று இல்லை. வல்லரசு என்ற நிலையிழந்து, மற்றைய தேசங்களுக்கு ஆணையிட்ட காலங்கடந்து, தனது பொருளாதாரத்தை, பாதுகாவலை அதிகம் கருதவேண்டிய நிலையில் நிற்கிறது.

சில ஆண்டுகளின் முன்னால், ஐரோப்பிய தேசங்கள் சில ஒன்றுசேர்ந்தன. தங்கள் நாடுகளின் முன்னேற்றத்துக்கு, பொருளாதார அபிவிர்த்திக்கு என கூட்டுமுன்னணி ஒன்றை உருவாக்கின. ஐரோப்பிய பொதுச்சந்தையே இந்தக் கூட்டணி. அங்கத்துவ நாடுகளின் ஏற்றுமதி இறக்குமதிகட்கு இச்சந்தை வழிவகுக்கும். அந்நிய செலவாணி கரைந்துபோகாது பாதுகாக்கும். ஏற்றுமதிப் பொருள்களை எதிர்நோக்கும் போட்டியைத் தவிர்க்கும். அங்கத்துவ நாடுகளிடையே அபிவிர்த்தித் திட்டங்கட்கும் உதவும்.

பொதுச்சந்தையின் நல்விளைவுகளைக்கண்ட பிரித்தானியா, தானும் அதில் சேர எண்ணியுள்ளது. இன்றைய நிலையில் ஐரோப்பிய நாடுகளுடன் கூட்டணிசேர்வது, பிரித்தானியாவுக்குப் பொருளாதாரத்துறையில் நன்மைபயக்கும் என நிபுணர்கள் பலர் கருதுகின்றனர்.

பிரித்தானியாவின் இப்புதிய கூட்டணி, அதன் பழைய நண்பர்கட்கு உதவுமா? காமன்வெல்த்நாடுகள் இப்பிணைப்புகண்டு கவலையுறுகின்றன. புதிய சுதந்திரநாடுகள் பிரித்தானியாவில் பெற்ற சலுகைகளை இழந்துவிடலாமென அங்கலாய்க்கின்றன. இலங்கையும் தனது ஏற்றுமதி பெருமளவில் பாதிக்கப்படலாமென அஞ்சுகிறது.

"தனக்குக் கண்டு தானம் வழங்கு" என்பது முதுமொழி. பிரித்தானியா இதுவரை எமது பொருளாதாரவளர்ச்சிக்குப் பெருமளவில் உதவியுள்ளது. இன்றைய நிலையில் அந்நாடு தன்னைக் காப்பாற்றுந் துறையில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளது. இத்தருணத்தில் எம்நாட்டைக் காப்பாற்றும் புதிய துறையில் ஈடுபடுதல் அவசியம்.

ஆசியாவின் நாடுகள் பல புதிதாகச் சுதந்திரம் பெற்றவை. முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பவை. இந்நாடுகள் ஒன்றுதிரண்டு ஒரு பொதுச்சந்தையை உருவாக்கினாலென்ன? அங்கத்துவ நாடுகளின் ஏற்றுமதிகட்கு போட்டியேற்படாது தவிர்க்க இக்கூட்டணி உதவும். இறக்குமதிப் பொருள்கட்கும் நியாயமான விலையை விதிக்க இயலும்.

இவ்வாரத்தில் இங்கிலாந்தில் கூடும் காமன்வெல்த் பிரதமர்கள் பிரித்தானியாவின் பொதுச்சந்தைப் பிரவேசம்பற்றி விரிவாக ஆராய்வர். அந்த ஆராய்ச்சி ஆசியாவுக்குக் கூட்டணியொன்றை ஏற்படுத்த உதவுதல் வேண்டும். பரஸ்பர நல்லெண்ணத்தையும், கூட்டுறவையும் தேசங்களிடையே வளர்ப்பது போட்டிமனப்பான்மையை ஒழித்துவிடும். மற்றைய தேசங்களையும் சகோதரர்களாகக் கருதும் நிலை ஏற்படின் உலகில் சண்டைசச்சரவுகட்கு இடமிராது.

# சுதந்திரம்

சுதந்திரம்! விடுதலை!! என்று மக்கள் அகிலஉலக முழுவதும் அறைகூவித்திரியும் இக்காலத்தில் மனிதனின் சுதந்திரம் எவ்வளவு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று ஆராய்தல் பிரயோசனமாயிருக்கும்.

பிரெஞ்சுத் தத்துவ ஞானியாகிய ரூசோ என்பவர், "மனிதன் சுதந்திரமாகப்பிறக்கிறான்; ஆனால், எங்குபார்த்தாலும் அவன் சங்கிலிகளால் கட்டப்பட்டுக் காட்சியளிக்கிறான்" என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறியது மிகவும் பொருத்தமானதே. "பூரண சுதந்திரம் எனக்கு இருக்கிறது; நான் விரும்பியபடி நடக்க எனக்கு உரிமைஉண்டு" என்று கூறும் ஒருவன் பிறந்த நாட்தொட்டே பலவித இயற்கைவிதிகளுக்கும், சமூகவிதிகளுக்கும் அடங்கி நடக்கவேண்டியவனாயிருக்கிறான்.

## இயற்கை விதிகள்

தனக்குப் பூரண சுதந்திரம் இருக்கிறதென்று புகழ்ந்து பேசுமொருவன் தன் சரீர சௌக்கியத்திற்காக இயற்கைவிதிகளுக்கு அமைந்து வாழவேண்டியவனாயிருக்கிறான். ஒருவன் தன் உடல் விருத்தி சம்பந்தமாக — சரீர ஆரோக்கியத்திற்காக பலவித சுகாதார போஷிப்பு ஒழுங்குகளுக்கு அமைந்து வாழவேண்டியிருக்கிறது. "விதிகளுக்கியைய வாழ்தல், வாழ்தல், வாழ்தல் அல்லது சாதல், சாதல், சாதல்" என்று இயற்கைஅன்னை எடுத்து ஒவ்வொரு நிமிஷமும் நமக்கு வற்புறுத்துகிறாள். சரீர சுத்தம் சம்பந்தமான விதிகள் மனிதனது சரீரத்தின் நன்மையின் பொருட்டே அனுசரிக்கப்படுகின்றன. இவ்விதிகளை அனுசரிப்பதால் மனிதனின் வாழ்க்கை சிரும், சிறப்பும், செழிப்பும் அடைகிறது. சரீர சௌக்கியமுள்ளவனாகவும் திகழுகிறான். எவ்வளவுக்கு இவ்விதிகளைமீறி, அலட்சியம்செய்து வாழ்கிறோமோ, அவ்வளவுக்கு எங்கள் வாழ்க்கை நோய்க்குள்ளாகிறது; துன்பத்துக்குள்ளாகிறது. தேகசுத்தத்தை அவமதித்து நடப்பவன் பலவித நோய்க்கிருமிகளால் தாக்கப்பட்டு, நோயுற்று, வலுவிழந்து, உருக்குலைந்து வருந்தி, இறக்கவேண்டியவனாகிறான். உணவுசம்பந்தமாகவும் ஒருவன் தன் வாழ்க்கையில் கவனமாயிராவிடில் பலவித நோய்களால் பீடிக்கப்படுவான். உதாரணமாகச் சலரோகத்தால் பீடிக்கப்பட்டோர் சீனி, மாச் சாப்பாடுகள், சோறு, கொழுப்பு, வெண்ணெய் முதலியவற்றைத் தமது உணவில் நின்று ஒதுக்குதல் அவர்களின் அடிமைத்தனத்தைக் காட்டுகிறதன்று; ஆனால், அவர்களுக்கு வாழ்க்கையிலுள்ள அக்கறையைக் காட்டுகின்றது.

## சமூக— அரசாங்க விதிகள்

மனிதனாகப் பிறந்த ஒருவன் ஒரு சமூகத்தில் சீவிக்க வேண்டியவனாயிருக்கிறான். மனிதன் ஒரு "சமூகப் பிராணி" என்று ஒரு பெரியார் வரைவிலக்கணம் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. மனிதன் தன் காளாந்த வாழ்க்கையில் தான் வாழும் நாட்டின் விதிகளுக்கு, சட்டங்களுக்கு அமைந்து நடக்கவேண்டிய கடமை பூண்டவனாயிருக்கிறான். எவ்வளவுக்கு ஒருவன் தன் நாட்டின் சட்டங்களுக்கு இயைய நடக்கிறானோ, அவ்வளவுக்கு அவனுக்குத் தன் நாட்டில் சுதந்திரம் இருக்கிறது. அந்நாட்டின் சட்டங்களைக் கண்டகண்டபடி மீறி நடப்பானாகில், அவன் கைதுசெய்யப்பட்டுச் சிறைச்சாலையில் தன் வாழ்நாட்களைக் கழிக்கவேண்டி நேரிடும். சிலவேளை மரணதண்டனைக்கும் பாத்திரவாளியாகலாம். இவ்விதிகள் யாவும் பொதுமக்களின் நன்மைக்காகவே அமுல் செய்யப்பட்டிருப்பதால் ஒவ்வொருவனும் அவ்விதிகளுக்கு அமைந்துநடப்பது சுதந்திரத்தை இழப்பது அல்ல; ஆனால், தன் வாழ்க்கையை நன்மையாக நடத்துவதே. இத்தால் தனக்கும் பிறருக்கும் அளவுகடந்த நன்மை ஏற்படுகிறதன்றோ!

## தேவனின் கட்டளைகள்

மனிதனின் வாழ்க்கை இரு கூறுபடுத்தப்பட்டிருக்கிறது. ஒன்று, சரீர — சமூக வாழ்க்கை. மற்றது, ஆத்மீக—சன்மார்க்க வாழ்க்கை என்று கூறின் மிகையாகாது. இலங்கையிலுள்ள எல்லாச் சமயங்களும் சரீர வாழ்க்கையோடு ஆத்மீக வாழ்க்கையையும் வற்புறுத்துகின்றன. ஆரம்பத்தில் கூறியவாறு விதிகள், ஒழுங்குகள், சட்டங்கள் எங்கள் சரீர வாழ்க்கைக்கு அத்தியாவசியம். அதேபோல் எங்கள் ஆத்மீகவாழ்க்கைக்குத் தேவனின் கட்டளைகள் அவசியம். எங்களின் ஈறுந்த கதி பாகதியென்று நாம் விசுவசித்தால், தேவன் நமக்கு விதித்திருக்கும் பரலோக பாதைப்படிகளாகிய தேவனின் கற்பனைகளைச் சுமுத்திரையாய் அனுசரிப்பது அவசியமன்றோ. தேவனின் கட்டளைகள் — கற்பனைகள் பத்து என்று கிறிஸ்தவர்கள் யாவருமறிவர். இவைகளுக்கியைய மனிதன் நடப்பதால் ஒருவன் தன் சுதந்திரத்தை இழக்கிறான்என்று கூறுதல் அறியாமை. தேவனைப் பற்றிய அறிவு இல்லாதவர்களுக்கும், பரமதேவன் "மனச்சாட்சி" என்ற தமது குரலை ஒரு பிறப்புரிமையாகக் கொடுத்திருக்கிறார். "நன்மை செய்; தீமை விலக்கு" என்ற நற்போதனைகள் யாவும் தேவனின் கற்பனைகளிலிருந்து சிந்திய சிறந்த நல்லொழுக்க முத்துக்கள் அன்றோ!

## திருச்சபையின் கற்பனைகள்

மனிதனின் ஈடேற்றத்தைத் தம் ஒரே இலக்காகக்கொண்டு பரலோகத்தைத் துறந்து மனுயிரெடுத்து இப்பூலோகத்தில் 33 ஆண்டுகள் சீவித்த நமது இரட்சகராகிய யேசுக்கிறிஸ்துநாதர் தமது மக்களை வழிநடத்த, தமது இரட்சணிய தொண்டைத் தொடர்ந்துநடத்த ஒருதிருச்சபையை ஸ்தாபித்தார். அத்திருச்சபையானது சகல விசுவாசிகளின் ஈடேற்றத் தொழிலை இலகுபடுத்தும் நோக்கத்தோடு ஆறு கற்பனைகளை வகுத்திருக்கிறது. இக்கற்பனைகளை அனுசரிக்க வேண்டியது கத்தோலிக்கரின் தவிர்க்க முடியாத கடமை.


நாங்கள் எத்துறையை எடுத்து ஆராய்ந்து பார்த்தாலும் மக்களின் வாழ்க்கை மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதென்று பெறப்படுகிறது. மனிதருக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரமே இருக்கிறது என்பது வெளிப்படை. ஆகவே, "பூரணசுதந்திரம்", "விடுதலை" என்ற சொற்கள் உணர்ச்சி மேலீட்டினால் தப்பறையான கருத்தை வெளிப்படுத்தமுடியும். ஒருவனின் சீரியவாழ்க்கையும் அவனின் பேரின்ப வாழ்க்கையும் பலவித இயற்கை விதிகளுக்கும் தேவனின் கற்பனைகளுக்கும் அமைந்து நடப்பதனாலேயே ஏற்படும் என்பதை மக்கள்— விசேஷமாகக் கத்தோலிக்கர் மறக்கமுடியாது.

பி. ச.

துர்ப் பழக்கம் ஒரு படுக்கையைப் போன்றது; அதில் விழுவது எளிது; எழுவது கஷ்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார அர்ச்சியசிட்டவர்



## ஐந்து திருக்காயங்களை அணிகலன்களாய்க்கொண்ட அர்ச். பிரான்சிஸ்கு அசீசியார்

இத்தாலியா தேசத்தின் அசீசிநகரத்திலே சீரும்சிறப்புடன் திகழ்ந்த செல்வக்குடும்பத்திலே—சிறும்புயலைக் கண்டு அக்கம் மாடடை தொழுவத்திலே ஏழ்மையின் எடுத்துக் காட்டாய் 1182-ல் அர்ச். பிரான்சீஸ் அசீசியென்வர் பிறந்தார்.

இப்பெருமான் சந்நியாசசீவியம் தொடங்கியபின் 1224-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 14-ந்திகதி திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள் நெருங்கி வருவதை உணர்ந்து அதிதூதரான அர்ச். மிக்கேல் சம்மனசைக்குறித்துத் தமது பாழுங்குடிசையிலே தம்மை முழுதும் ஒடுக்கி நாற்பது நாட்கள் ஒருசந்தி உபவாசம் பிடித்துத் தியான யோகத்திலே ஆழ்ந்திருந்தார்.

அமைதிநிலவிய அவ்வேளையிலே, ஒருதேவதூதன் அவ்விடத்தில் அவருக்குத் தரிசனையானுர். இதைக் கண்ணுற்ற பிரான்சீஸ்கு அசீசியார் பயப்பிராந்தி கொண்டு யாது செய்வதென்று அறியாமல் தவித்தார். உடனே தேவதூதன் அவரைத்தேற்றி, "நீர் பொறுமையாயும் தாழ்மையாயும் தேவசித்தத்திற்குப் பணிந்து நடந்து தேவன் தமது சாயலாக உம்மிடத்தில் செய்யச் சித்தமான யாவற்றிற்கும் உம்மை இன்றிருந்தே ஆயத்தப்படுத்திக் கொள்ளும். கடவுள் உமக்கு அருள்பாலிப்பார்" எனப் பகர்ந்து அவரின் ஞானவளர்ச்சியை மேலும் உற்சாகப் படுத்தலானுர். இச்செய்தியை செவியுற்ற அசீசியார் பதில் மொழியாக: "நான் கூடுமான மட்டும்பொறுமையாய் இருந்துகடவுள் எனக்குத் தாச்சித்தமான சுமையைத் தேவசித்தத்துக்குக் கீழ்ப்படிந்து மனப்பூரணமாய் ஏற்றுக்கொள்வேன்" எனப் பகரத் தேவதூதன் அதரிசனமானுர்.

திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாளுக்கு மூந்தியநாட்காலை தமது பாழும் குடிசையினுள் கிழக்குமுகமாய்த் திரும்பி செபத்தியானம்செய்து யேசுக்கிறிஸ்துநாதரின் திருப்பாடுகளைப்பற்றி உருக்கத்தோடும், துக்கத்தோடும் தியானித்துக் கொண்டிருக்கையில் பத்திச்சுவாலகரொருவர் மகா பிரகாசமுள்ள ஆறு அக்கினிச் சிறகுகளுடன் மோட்சத்திலிருந்து தம்மை நோக்கி அதிவேகமாய்ப் பறந்துவருவதைக் கண்டு அதிசயித்தார். அத்தரிசனம் கல்வாரியில் சிலுவையிட அறையுண்டு உயிர்நீத்த யேசுவின் சாயலாகச் சிலுவையில் அறையுண்ணப் பிரகாரம் ஆகாயத்தில் நிற்கையில், அதன் இரு கை, கால்களிலும் விலாப் பக்கத்திலும் ஐந்து திருக்காயங்கள் அவர் கண்முன் காட்சியளித்தன. அப்படியாகத் தோன்றிய ஐந்து திருக்காயங்களிலிருந்தும் ஐந்து ஒளிக்கதிர்கள் புறப்பட்டு அர்ச்சியசிஷ்டவரின் இரு கரங்களிலும், இருபாதங்களிலும், விலாவிலும், திருக்காயங்களைப் பதித்தன. உடனே அவர் சிரசிலும், ஏனைய இரு சிறகுகளும் நீண்டயர்ந்து அவரது பரிசுத்த தேகத்தையும் மூடிக்கொண்டன.

அக்கணத்தில் அவர் தங்கி இருந்த அல்வேர்ணியா மலையைச்சுற்றிப் பிரமாண்டமான அக்கினிப்பிரகாசம் பரவி அவ்விடத்தைப் பட்டப்பகல் போல் காட்சிஅளிக்கச் செய்தது. அச்சுடரொளி அவ்விடத்தை மட்டுமன்றி அது எங்குபார்த்தாலும் ஒரே வெளிச்சமாய் இருக்கிறதெனக் கண்ணுற்ற அவ்வூர்வாசிகள் சூரியன் உதயமாகி விடிந்துவிட்டதெனக்கூறித் தங்கள் படுக்கையை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தத்தம் வேலைகளுக்குச் செல்லப் புறப்பட்டனர். ஆனுல், இவ் வெளிச்சம் அதிக நேரம் நீடிக்கவில்லை. கொஞ்சநேரத்தால் இப்பிரகாசம் மங்கிவிடப் பொழுதும் உதயமாயிற்று. இவ்வேளையிலே அர்ச். பிரான்சீஸ்கு அவரின் உற்றநண்பராகிய திவ்விய கர்த்தரோடு பற்பல இரகசிய விடயங்களைக் குறித்துச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

சொற்ப நேரத்தால் காட்சி மறைந்த அவ்விடத்தில் அமைதி தாண்டவமாடியது. இதனுல் இப்பெருமானுக்கு "ஐந்து காயப்பிரான்சீஸ்கு" எனப் பெயர் வழங்கலாயிற்று.

ஐந்து காயப்பிரான்சீஸ் அசீசியாருக்கு நமக்காகத் தன் பிராணனைக் கொடுத்த யேசுநாதருக்குப்போல் கால்களிலும், கைகளிலும் ஆணிகளின் காயங்கள் பதிந்திருந்தன. இவற்றின் முனைகள் உள்ளங்கை, உள்ளங்கால்களின் வழியாகப் பிற்பக்கமாக வெளியாகி வளைந்து உருண்டு திரண்டிருந்தன.

இந்தக் காயங்களிலிருந்து இரத்தம் புறப்பட்டுக் கொண்டிருக்கும். ஈட்டியால் ஊடுருவப்பட்ட யேசுவின் திருவிலாவிலிருந்து இரத்தம் சொரிவது போல் இந்த அர்ச்சியசிஷ்டவரின் விலாவிலிருந்தும் இரத்தம்வழிந்தோடி அவரது அங்கியிலும் தவைந்து கறைபட்டிருந்தது. இத்திருக்காயங்களால் உண்டான வேதனையை இவர் யேசுவிற்காக, பொறுமையோடு அனுபவித்தார். இத்திருக்காயங்களை இந்த அர்ச்சியசிஷ்டவர் தாழ்ச்சியால் பலமுறை மறைக்கப் பார்த்தாலும் அவராலே அது கூடாமல் போனதோடு அதனுல் பல புதுமைகளும் மக்கள் மத்தியில் நடந்தேறின. இந்த அர்ச்சியசிஷ்டவர் அடைந்த இவ்வற்புத சம்பவத்தை மகிமைப்படுத்தவே திருச்சபையானது வருடாவருடம் இம்மதி 17-ம்நாள் அவருடைய ஐந்து திருக்காயங்கள்பதிந்த திருநாளை வெகு சிறப்போடு கொண்டாடி வருகிறது.

நாமும் இந்த அர்ச்சியசிஷ்டவரின் முன்மாதிரிகையைப் பின்பற்றித் தாழ்ச்சி என்னும் புண்ணியத்தை அனுசரித்து வருவதோடு, கர்த்தருடைய திருப்பாடுகளையும் திருக்காயங்களையும்பற்றி அடிக்கடி தியானித்து வருவோமாக.

சகோ. அகுஸ்தீன் (ம. பி. ச)

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியார், அர்ச். யூதாததேயு இவர்களிடம் நான்கேட்டுக்கொண்ட மன்ருட்டின்பலன் கிடைத்தது. இவர்களுக்கு எனது தாழ்மையான நன்றி. இவர்களின்நாமம் என்றும் புகழப்படுவதாக.

அ. பி. சேவியர்

159/62

---

## ஆபாச நூல்கட்கெதிராக ஆர்ப்பாட்டம்
### கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் நடவடிக்கை

இங்கிலாந்திலும், வேல்சிலுமுள்ள பத்தாயிரத்துக்குமதிகமான கத்தோலிக்க ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக்கொண்ட கத்தோலிக்க ஆசிரிய சங்கத்தினர் ஆபாச நூல்கட்கெதிராகப் பெருமளவில் எதிர்ப்புக்காட்டத் தீர்மானித்திருக்கின்றனர். இங்கிலாந்தின் கர்தினுல் மகாமேன்மைதங்கிய கொட்பிரி ஆண்டவரவர்கள் இச்சங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு ஆதரவுதந்திருக்கிருர். கார்ட்டூன் ஆபாசங்கள், அரைநிர்வாணப்பிரசுரங்கள், பாலுணர்ச்சியைத்தூண்டும் இழிவான இலக்கியங்கள் அனைத்தும் வருங்காலச் சந்ததியின் நலன்கருதித் தடைசெய்யப்படல் வேண்டுமெனச் சிலமாதங்கட்கு முன்னர் இச்சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

கொலம்பசின்படையணியினர், கத்தோலிக்க எழுத்தாளர் இயக்கத்தினர், கத்தோலிக்க தேசிய மாதர் சங்கத்தினர், கத்தோலிக்க வாலிபர் இயக்கத்தினர் ஆதியோர் கத்தோலிக்க ஆசிரியர்கள் ஆபாச ஏடுகள் சம்பந்தமாக எடுக்கவிருக்கும் எந்த நடவடிக்கைக்கும் தங்கள் ஆதரவுகிடைக்கும் எனத் தெரிவித்திருக்கின்றனர்.

---

## மகாசயஸே கௌரவத்தைப்பெறும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளரைப் பராமரிப்பதிலும், அனுதரவாக மரிப்போரின் அந்தியகாலத்தை மகிழ்சியுற்றதாக ஆக்குவதிலும், அங்கவீனக் குழந்தைகளை ஆதரிப்பதிலும் தன்னலங்கருதாப் பணியாற்றிவருகின்றனர்.

தெரேசா அன்னை ஒரு சிறந்த நிர்வாகி. பக்தியருட்சி மிக்கவர். இறைவனில் அபார நம்பிக்கை கொண்டவர். தியாகமும் துணிவும் கொண்டவர். அவரது நிறுவனத்தின் ஆதரவில் 14 ஆரம்ப பாடசாலைகளும், எட்டு குஷ்டரோகர்சாலைகளும், ஒரு காசரோகர் நிலையமும், ஆறு மருத்துவமனைகளும், அங்கவீனக் குழந்தைகள் பாடசாலையொன்றும், இரண்டு வர்த்தகப் பாடசாலைகளும், ஒரு தச்சுத்தொழிற்பாடசாலையும் இயங்கிவருகின்றன.

அன்னை தெரேசாவின் பணிகளைக் கௌரவிக்குமுகமாக முன்னுள் இந்திய ஜனுதிபதி ராசேந்திரபிரசாத் அவர்கள் அண்மையில் பதவியிலிருந்து விலகுதற்கு முன்னர் பாரதத்தின் இரண்டாவது பெரிய கௌரவமான பத்மவிபூசன் என்னும் பதக்கத்தை வழங்கினுர். சிலமாசங்கட்கு முன்னர் உலகப்பிரசித்திபெற்றடைம் செய்திச் சஞ்சிகை இக்கன்னிகையின் சேவையைப் பாராட்டிச் செய்தியறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அண்மையில் பத்திரிகை நிருபர்கள் சிலர் அன்னை தெரேசா உலகப்பிரசித்திபெற்ற மகாசயஸே கௌரவத்தைப் பெற்றதற்காக அவரைச்சந்தித்துத் தமது பாராட்டுதல்களையளித்தனர். அப்போது அவர்களிலொருவர் பரிசுத் தொகையான பத்தாயிரம் டாலர்களையும் அன்னையர் யாது செய்வாரென வினுவினர். அன்னையரின் பதில் கத்தோலிக்கரெவரையும் ஆச்சரியத்திலாழ்த்தாது. ஆம் எந்த ஏழைகட்கு யான் பணியாற்றுகின்றேனே அவர்கட்காகவே அந்த டாலர்களைச் செலவிடுவேன் என்றவிடையைக்கேட்ட நிருபர்கள் ஆச்சரியமடைந்தனர்.

---

## கடவுளின் தினத்தில் பிரயாசையான வேலைகள் வேண்டாம்

ஞாயிறு, கடன் திருநாட்களில் கத்தோலிக்கர்கள் திவ்வியபூசைக்குச் சமுகமளிப்பதிலும், சரீரப் பிரயாசையான அலுவல்களை அந்நாட்களில் செய்யாமல் விடுவதிலும் முக்கிய கவனம் எடுத்துக் கொள்ளவேண்டுமெனப் பாப்பரசர் அண்மையில் தமது கோடைகால வாசஸ்தலத்திலிருந்து வத்திக்கானுக்குப் புறப்படுவதற்கு முன்னுல் கேட்டுக்கொண்டார். கோடைகால மாளிகை அமைந்துள்ள காஸ்தல் கண்டல்போவுக்கு லாபானு விசாரணைப்பங்கினர் விஜயஞ்செய்திருந்தனர். அவர்கட்குப் பேட்டியளிக்கும்போதே பரிசுத்த தந்தை மேற்கூறிய எச்சரிக்கையை விடுத்தார்.

ஞாயிறு தினம் கடவுளின் தினம்; மற்றைய தினங்களில் எங்கள் சரீரத்துக்கடுத்த எத்தனையோ அலுவல்களில் ஈடுபடுகிறேம். இந்த ஒரு தினத்திலாவது நாம் இறைவனைப்பற்றி நினைப்பதிலும், எமது ஆன்மாவுக்கடுத்த விசயங்களைச் சிந்திப்பதிலும் செலவழிக்க வேண்டாமா? என, பாப்பரசர் மேலும் குறிப்பிட்டார்.

---

மன்னுர் வவுனியா மாவட்ட
தேசீய பாடசாலைகளின்

### விளையாட்டுப் போட்டி

நிகழும் புரட்டாதி மாதம் 7-ம், 8-ம் திகதிகளில் வவுனியா மாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் உதவி வித்தியாதிபதி Dr. A. W. P. குறுகே அவர்கள் தலைமையிலே நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் 46 பாடசாலைகள் கலந்துகொண்டன. முடிவில் முருங்கன் றே. க. பாடசாலை ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் பெற்ற கூடிய புள்ளிகளால் இருபிரிவுகளிலும் முதலாம் இடங்களைப் பெற்று முறையே அவ்வவற்றிற்குரிய கேடயத்தையும் (Shield), கிண்ணத்தையும் (Cup) சுவீகரித்துக்கொண்டது.

மேலும், பெண்கள் மேற்பிரிவில் செல்வி V. செல்லம்மா, மத்திய பிரிவில் செல்வி S. சோதிமலர், கீழ்ப்பிரிவில் செல்வி S. சுகிர்தமலர் என்போர் காட்டிய திறமைக்காக ஒவ்வோர் கிண்ணமும் வழங்கப்பட்டது. உதவி வித்தியாதிபதி Dr. A. W. P. குறுகே அவர்களின் பாரியார் பரிசுகளை வழங்கினுர்.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

**சோதரிகளே !**

**இப்போது அநேக சகோதரிகள் ஊக்கமெடுத்து நம் மகளிர் மன்றத்தைத் தம் விஷயதானங்களால் அலங்கரிக்கிறார்கள். இவர்கட்கு எமது மனமார்ந்த நன்றிகள். ஓரிருமுறை எழுதுவதுடன் சோர்ந்துவிடாது எம்பகுதி சிறப்புறச் செய்யவேண்டியது நும்கடமை. இப்பகுதியினால் கத்தோலிக்க மாதர் உலகம் எவ்வளவோ நன்மைகளை அடையமுடியும். அத்துடன் எமது பாதுகாவலன் பத்திரிகையை எம் அயலவர்க்கு விநியோகித்து அதன்வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.**

அன்புச் சோதரி, றேசா.

## கல்யாண வைபோக நாளே.......

**அன்புச்சோதரி பிரமீளாவுக்கு !**

சென்றவாரம் யான் எழுதிய அறிவுரைகள் உன் மனதைக் கவர்ந்தன என்று எழுதியிருக்கிறாய். ஆமாம்! உனது சுபதினம் சமீபித்துவிட்டதல்லவா ? சரி! இம்முறை இத்தினத்தை நீ பரிசுத்தமாகக்கழிக்கவேண்டிய முறையைப்பற்றிச் சில கூறுகிறேன் கேள்.

ஆதியில் இறைவன் ஆதாம் ஏவாளுக்கிடையில் விவாகபந்தனத்தை ஏற்படுத்தினார். கானாவூரில் திருமணத் தம்பதிகளை ஆசீர்வதித்தபொழுது யேசுநாதர் இதைத் தேவதிரவிய அனுமானமென்னும் உன்னதநிலைக்கு உயர்த்தியுள்ளார். எனவே, இவ்விழாவை வேடிக்கை விநோதமாகக் கருதுவது கத்தோலிக்க பெண்ணுக்கு ஏற்றதல்ல. புனிதமான புதுவாழ்வைத் தொடங்கும்அன்று திருச்சபைமுறையிலும், உலகவழக்கிலும் நடைபெறும் ஒவ்வொரு சடங்குகளும் உன் மனதில் பரிசுத்தமான எண்ணங்களை எழுப்பவேண்டியது அவசியம்.

இச்சுபதினத்தன்று காலையில் மேளங்களின் ஆர்ப்பரிப்பும் வெடிச்சப்தங்களும் உள்ளத் துயிலெழுப்புகின்றன. உலக எண்ணங்களில் அழுந்திவிடாது கண்விழித்ததும் காலைச் செபத்தை முதலில் ஓதி இந்நாளையும்,உன் எதிர்கால வாழ்வையும் இறைவன் கையில் ஒப்படைக்க மறந்து போகாதே.

மணப்பெண்ணாகிய உனக்குப் பளிங்குபோன்று விளங்கும் தூய வெண்ணுடையை அணிவிக்கின்றார்கள். அழகிய வெண்மலர்களான பூச்செண்டு உன் கையில் காட்சியளிக்கின்றது. நீண்ட வெண்ணிற துப்பட்டியொன்று உன் தலையிலிருந்து சோர்ந்துவிழ்ந்து உன்னை அலங்கரிக்கிறது. இயற்கையிலே அழகான உனக்கு இந்த அலங்காரம் புதிய சோபையை ஊட்டுகின்றது. இவையெல்லாம் எதற்கு அடையாளம் தெரியுமா? உன் மணவாளனை எதிர்கொள்ளப் போகும் நீ உடலிலும் உள்ளத்திலும் கன்னிகை என்பதைக் காட்டுகின்றது. புத்திவிபரம் அறிந்த நாளிலிருந்து தனது கற்பைப் பரிசுத்தமாகக் காப்பாற்றியிருந்தால் அப்பெண் உண்மையான பாக்கியவதியே. ஆனால், எத்தனையோ பெண்கள் இதற்குமுன் வேறு ஆடவர்களுடன் அனுவசிய தொடர்புகளேற்படுத்தித் தம் கற்பை இழந்துவிடுகின்றார்கள். அப்படியிருந்தாலும் மரியமதலேனாளை மன்னித்து அர்ச்சியசிஷ்டவளாக்கிய தேவனின் இரக்கத்துடன் இவர்கள் நல்லமனஸ்தாபப்பட்டு, தம் பாவக்கறைகளைநீக்கி இச் சுபதினத்திலிருந்தாவது தமதுகற்பைப் பரிசுத்தமாகக் காப்பாற்ற நல்ல பிரதிக்கினை எடுத்துக்கொள்ளக்கடவார்களாக.

அடுத்ததாக, உன் முகத்தை மறைத்து ஒரு சிறிய துப்பட்டியைத் தொங்கவிட்டு உன்னைக் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார்கள். இன்றிலிருந்து நீ உனது பெற்றோர், சோதர சோதரிகள், சிநேகிதர் யாவரையும் வீட்டு உனது கணவனையே முதலில் நேசித்து, அவனுக்குப் பணிந்துநடக்க வேண்டுமென்றே இது காட்டுகின்றது.

ஆலயத்தில் குருவானவர் திருமணச் சடங்குகளை நிறைவேற்றுகிறார். இறைவன் சந்நிதியில், **வாழ்விலும், தாழ்விலும், இறக்குமட்டும்** இணைபிரிய மாட்டேன் என்று உனது சம்மதத்தை நீ தெரிவித்துக்கொள்ளுகின்றாய். இந்நேரத்தில் சம்மனசானவர் மங்கள வார்த்தை கூறியபொழுது இறைவனின் தாயாகும் பாக்கியத்தை உணர்ந்தபொழுதே, தான் படவேண்டிய வியாகுலங்களையும் மனதிற்கொண்டு "ஆம்" என்று மனுக்குல இரட்சணியத்துக்காகத் தன்னை ஒப்புக்கொடுத்த தேவதாயை உன்நினைவிலிருத்திக்கொள்வாயாக. இன்றைய தினத்தில் கொடுக்கும் வாக்குத்தத்தத்தைச் சரிவர மகளிர் உணர்ந்து செய்தால் குடும்பக்கட்டுப்பாடு, பிரிவினை, விவாகரத்துப்போன்ற சீர்கேடுகள் நம் கிறிஸ்தவ குடும்பங்களில் தலைகாட்டவேமாட்டா.

இச்சுபதினத்தில் உனது மணவாளன் தனது அன்புப்பரிசாக மூன்று விலையுயர்ந்த பொருட்களை உனக்கு அளிக்கிறான். முதலில் திருமணத்தின் மங்கலச் சின்னமாகிய மாங்கல்யத்தை குருவானவரது ஆசியுடன் அணிவிக்கிறான். அதைத் தலைகுனிந்து ஏற்றுக்கொள்ளும் நீ இல்லறத்தின் முதல் வார்த்தைப்பாடான **அமைச்சலைக்** கடைப்பிடிக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்துகொள்ளவேண்டும். அதன்பின் கல்யாண ஞாபகார்த்தமான கணையாழியை உன் விரல்களில்போடுகிறான். இது என்றும் நீ **தரித்திரமென்னும்** வார்த்தைப்பாட்டைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று காட்டுகிறது. துறவறத்திலுள்ளவர்களுக்குத்தான் இவ்வார்த்தைப்பாடு என்று எண்ணாதே. உனது சிக்கனமான வாழ்வு, வரவுக்குத்தக்கசெலவு, எளியவர்க்கு உதவி, என்பனவற்றில் இவ் வாக்குத்தத்தம்சோபிக்கட்டும். அடுத்ததாக அழகிய சரிகைவேலைப்பாடமைந்த கூறையை உனக்கு அணிவிக்கிறான். இனிமேல் நீ எல்லாவற்றிலும் உன் கணவனுக்கே சொந்தம். உனது மேனியை அலங்கரிக்கும்இவ்வுடையை அணிந்தபின் நீ, என்றும் உள்ளத்திலும், உடலிலும்பூரணகற்புள்ளவளாய்ப் பிறமனை விரும்பாது நடந்து, **கற்பு** என்னும் வார்த்தைப்பாட்டைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

ஆலயத்தில் சடங்குகள் முடிந்ததும் திரும்பவும் தம்பதிகளான உங்களை உன் பிறந்தவீட்டில் அழைத்துக் கொண்டாட்டங்கள் நடத்துகிறார்கள். நீ விவாகமாகிக் கணவனுடன் சென்றாலும் உனது பெற்றோர், உற்றோருக்கு நீ காட்டவேண்டிய ஆதரவு, அன்பு, உதவி ஒத்தாசையைத் தக்க தருணங்களில் கணவனுடைய அனுமதியுடன் செய்யவேண்டும் என்பதை இது காட்டுகின்றது. "ஒரு வாலிபன் ஒரு மனைவியை அடையுமட்டுமே மகனாக விளங்குகிறான். ஆனால், ஒரு பெண்ணோ விவாகமான பின்னும், என்றென்றும் மகளாக விளங்குகிறாள் என்ற ஆங்கிலப் பழமொழியை நீ கேள்விப்பட்டிருக்கிறாயல்லவா ? இப்பழமொழி உன் இலட்சியங்களில் ஒன்றாக இருக்கட்டும்.

திருமணத்தன்றோ அன்றேல் ஓரிரு நாட்களிலோ உனது கணவன் வீடு

(அடுத்த பக்கம் பார்க்க)

## அன்னை மரிபோல்.......

"உயர்ந்த கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருக்கிறீர்களே; ஆகையால் உங்கள் உடலில் உன்னத தேவனைக் கொண்டிருந்து மகிமைப்படுத்துங்கள்" என அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் கூறியுள்ளபடி யாம் ஞானஸ்நானத்தின் வழியாகத் திருச்சபை அன்னையின் அன்புப் புத்திரிகளானோம். அன்றுமுதல் எமது சரீரம் தூயஆவியானவரின் தூய ஆலயங்களாகவும், தேவனின்மகிமைப் பீடங்களாகவும் மாறுபட்டுள்ளன.

இத்தகைய சிறப்புவாய்ந்த உடலை உயர்நிலையில் வைத்திருப்பது வனிதையரின் தனிப்பெருங் கடனாகும். மங்கையர் தம் மாசற்ற மேனியைப் பேணிக் காக்கவென்றே ஆடைகள் அணியப்படுகின்றன என்ற கோட்பாடு இன்றைய நவநாகரிக நூற்றாண்டில் மறைந்தொழிந்து வருவதை யாம் கண்ணாரக்கண்டு கலங்குகின்றோம். மரியாதையுடன் உடுத்தி மாமரியின் புதல்விகளாகப் புனிதமுடன் விளங்கிய ஆரணங்குகள் பலர் இன்று கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனச் சினிமாவில் அலங்கோல ஆடையணியும் பாவையரைத் தாமும் கண்டுபாவித்து அநாகரிக அவலட்சண கோலத்துடன் ஆலயவழிபாட்டில் கூடப் பங்குபற்றுவதைப் பார்க்கும் பரிசுத்த மங்கையர்கள் நாணித்தலைகுனிந்து மனம் வருந்துவரெனில் ஆண்களின் நிலைபற்றி எடுத்துரைக்க வேண்டிய அவசியமில்லை.

இன்று மனிதசமுதாயம் சீர்கேடடைவதற்கு அநாகரிகஆடையணியும் மங்கையரே காரணமாயுள்ளனர் எனக் கூறிடலாம். அன்று ஆண்கள் அன்புத்தெய்வங்களாகப் போற்றிய பெண்கள் இன்று வீதிகள், வியாபாரஸ்தலங்கள், விளம்பரங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள் எல்லாம் எமது விழிகளால் பார்க்கமுடியாதவாறு இழிவான கோலத்துடன் சித்திரிக்கப்பட்டு வருகின்றனர். இத்தகைய இழிவான நிலைமையை நமது அன்னைமாமரியின் மக்கள் அடைந்துவிட்டனர். "சீர்கெட்ட சமுதாயத்தைச் சீர்ப்படுத்துவது தையலரின் தனிப்பெருங்கடன்" எனக் காலஞ்சென்ற 12-ம் பத்திநாத பாப்பரசர் கூறியுள்ளார். இன்றையநிலையில் சீர்கெட்ட மங்கையரைச் சீர்ப்படுத்துவது சீர்பெற்ற கிறிஸ்தவ நங்கையரின் முதற்கடனாகும். ஒவ்வொரு கிறிஸ்தவபெண்ணும் மரியாதையாக ஆடையணிய முற்பட்டால் அகிலம் அனைத்துமுள்ள மங்கையர் மரியாதையுடன் ஆடையணிவர் என்பதற்கையமில்லை. இத்தகையஉயர்நிலை ஏற்பட்டால்"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடவேண்டுமம்மா"என யாம் பாடி மகிழலாம். கிறிஸ்தவ சகோதரிகளே! சிந்தியுங்கள். அன்னைமரிபோல் அழகாக ஆடையணிந்து ஆலயம் செல்லுங்கள். அப்போதுதான் ஆண்டவரின் ஆசீர் உங்களுக்குக் கிடைக்கும். அன்புமிக்க அன்னையரே! அலங்கோல ஆடையணியும் புதல்விகள் உங்கள் குடும்பத்திலிருப்பரேல் அவர்களைச் சீர்ப்படுத்த முயற்சியுங்கள். அன்றேல் உங்களுக்குக் கேடுவிளையும் என்பது திண்ணம்.

எல். அருள்.

## இல்லத்தரசிக்குப் பத்துப் பாக்கியங்கள்

1. பணத்தின் அருமை அறிந்தும், அதற்கு அடிமையாகிவிடாத மனைவி பாக்கியசாலி.

2. தன்கணவனது தொழிலுக்கு உறுதுணையாயிருந்து, எங்கு தனது கணவன் இருந்தாலும் அங்கெல்லாம் இல்லம் சிறக்கவாழ்பவளும், கணவனது தொழிலில் திருப்தியுடையவளாயிருப்பவளும், குடும்பத்தை நடாத்துவதில் மற்றைய கணவன்மாரைவிட எவ்விதத்திலும் குறைந்தவன் அல்ல தன் கணவன் என்று திருப்திகொள்பவளும் பாக்கியசாலி.

3. தனது குடும்பத்தில் அதிகபற்றுதலோ, அன்றேல் கணவனின் குடும்பத்தாரிடம் குறைவான தாற்பரியமோ இல்லாத மனைவி பாக்கியவதி.

4. தனது வீட்டைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதோடு, மற்றவர்களது மதிப்பைத் தேடமாத்திரம் அல்ல; தனது கணவனை மனரம்மியப் படுத்தவும், பிரீதிப்படுத்தவும் தன்னை அழகாகவும் கவர்ச்சியாகவும் வைத்திருந்து, கணவன் விருப்பு வெறுப்புக்கேற்ற உணவு தயாரித்துக்கொடுத்து மகிழ்ந்து வாழ்பவள் எவளோ அவள் பாக்கியசாலி.

5. தன் கணவன் குற்றங்களைப் பொருட்படுத்தாத மனைவியும், அவனது குறைகளை மறந்து மன்னித்து, மனத்தாங்கல்களை அகற்றிவிடும் மனைவியும் பாக்கியவதியாம்.

6. கண்ணீர் வடித்துக் கருமம் பார்ப்பதையும், முணுமுணுப்பையும், நச்சரிப்பையும் தவிர்த்து வாழும் மனைவி பாக்கியவதியே.

7. தனது பத்தாவின் நண்பர்களையிட்டுப் பொறுமைப்படாத மனைவி பாக்கியவதியாம்; ஏனெனில், அவள் தனது கணவனின் அன்பிற்கு முழுதும் பாத்திரமாகி, முதலிடம் பிடித்துவிட் அறிந்திருக்கிறாள்.

8. புத்திர சந்தானமே திருமணத்தின் பிரதான நோக்கம் என உணரும் மனைவி பாக்கியவதியாம். அவள் பிள்ளைப்பேற்றை ஆசிப்பதுடன், கடவுள் அளிக்கும் பிள்ளைச் செல்வங்களை அன்போடும், நல்மனதோடும் வரவேற்பதோடு, பாவமான நவநாகரிக குடும்பக்கட்டுப்பாட்டை, கருத்தடை, கருவறுப்புகளையும் கண்டிப்பாக எதிர்ப்பவளும் ஆவாள்.

9. அடிக்கடி தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுத் தனது ஆத்துமத்தைப் பரிசுத்தப்படுத்திக் கொள்பவளும், குடும்பச் செபத்தினாலேயே தன் குடும்பத்தையும் தூய்மையாக்க விளைபவளும், எல்லாத்துக்கும் மேலாகத் தனது கணவனும், மக்களும் மோட்சம் சேரவேண்டும் என்று ஆசிப்பவளும் பாக்கியவதியாம்.

10. பிறரால் நேசிக்கப்பட வேண்டும் என்று விரும்புவதிலும், பிறரை அதிகம் நேசிப்பவளும், மற்றவர்களால் சேவிக்கப்படவேண்டும் என்று விரும்புவதிலும் மற்றவர்களுக்கே அதிக சேவை செய்பவளும் ஆசீர்வதிக்கப்பட்டவளாமே.

எஸ். எம். ஜே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் மன்றத்தொடர்ச்சி

செல்லுகின்றாய். உன் மாமன், மாமியார், நாத்தனார், நாத்திகள் உன்னை எவ்வளவோ சந்தோஷமாக வரவேற்கிறார்கள். ஆனால், இச்சந்தோஷம் பல வீடுகளில் என்றென்றும் நிலைப்பதில்லை. மாமி—மருமகள் சண்டை, நாத்தனார் சண்டைஎன இரண்டொரு மாதங்களில் ஊரடிபடத்தொடங்கிவிடுகிறது. நீ வயதில் குறைந்தவள், அனுபவமற்றவள். ஆகவே, மாமன் மாமியார், நாத்தனாருக்குப் பணிந்து சுமுகமாகநடந்து சமாதானவாழ்வை நடத்த வேண்டும் என்பது மனதிலிருக்கட்டும்.

இன்றையதினத்தில் உனக்கு வாழ்த்துக்கள், பரிசுப்பொருட்கள் தந்தவர்கட்கும், உனது திருமணத்துக்கான உதவிகள் புரிந்தவர்கட்கும் நீ என்றும் நன்றியுள்ளவளாக இருக்கவேண்டும். அவர்கட்கு உரிய வேளைகளில் நீயும் அவர்கட்கு உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறாய் என மறந்துபோகாதே.

திருமணநாள் இன்பமாகக் கழிந்துவிட்டதா? தம்பதிகளாக உங்கள் இல்லறவாழ்வைக் குடும்பசெபமாலையுடன் ஆரம்பிப்பது நல்லது. இன்று ஆரம்பிக்கும் இந்தநல்ல வழக்கம் மரணமட்டும் நீடிக்கவேண்டும். ஒருமித்துச்செபிக்கும் குடும்பம் என்றும் பிரிந்துபோகாது என்று அறிந்திருக்கிறாயல்லவா? இக்குடும்ப செபமாலைதான் உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களில் கைகொடுக்கும்.

அதிகம் எழுதிவிட்டேன். உனது திருமணவிழா உனக்குப் பரிபூரண சந்தோஷமுள்ளதாக இருக்க இறைவன் அருள்புரிவாராக. நீங்களிருபேரும் பத்தும், பதினாறும்பெற்றுப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

ஆமாம். உனது திருமணக்கேக்கில் எனக்கும் பங்கு கிடைக்குமல்லவா? கல்யாண வைபோகநாளில் உன் அன்புத்தோழியை மறந்துவிடாதே.

மனம்நிறைந்த ஆசிகளுடன் முடிக்கிறேன்.

புனிதா.

## திருமறைத் திருக்குறள்

பேரால் புகழால் பெருவாழ்வால் என்னபயன்
சீர்பெறும் ஆத்துமம் சிதையின்

தாமறிந்த நல்மறையை நாடறியச் செய்வதே
மானிடர் ஆனோர் கடன்.

இன்பத்துள் இன்பம் இறைவன் பதம்சேர்தல்
இன்பத்துள் எல்லாம் தலை.

கருவறுக்கும் நும்வாழ்வைக் கருத்தடையைக் கையாளின்
பெருகிடுமே அக்கிரமப் பேய்.

தன்னைப்போல் பிறரை நேசியான் வாழ்க்கை என்றும்
என்ன பயனுடைத்தும் இல்.

ஈடுமெடுப்பான இவ்வுலக வாழ்க்கை பொய்
தேடு அழியாத் திரு.

இன்பத்தில் தேவனை ஏறெடுத்தும் பாராதோர்
துன்பத்தில் நாடுவது ஏன்.

மக்களைப் பெறுவது மட்டும் கடமையல்ல
தக்கபடி வளர்ப்பதே சால்பு

உண்டாக்கப்பட்டோம் உன்னத நோக்கத்துக்காய்
திண்டாட்டம் ஏனோ தெளி.

அறிவாய் பரனை அன்புசெய்வாய் பணிபுரிவாய்
பெறுவாய் பேரின் விடு.

ஆசிரியர்: ச. அமிர்தநாதர்.

# செவ்வாயன்று......

அன்றொருசெவ்வாய்க்கிழமை. யாழ்நகர் பஸ்நிலையத்தில் நின்றுகொண்டிருந்தேன். "மானிப்பாய்" என அறிவிப்புப்பலகை மாட்டப்பட்டிருந்த இடத்தில் ஒரேசனக்கும்பல். சற்று யோசித்தேன். விடைகண்டுபிடிக்க அவ்வளவு நேரமா போய்விடும். அவர்கள் கையிலிருந்த அர்ச். அந்தோனியாரின் செபப்புத்தகங்கள் சொல்லிவிட்டனவே எங்கே போகிறார்களென்று.

ஆமாம், மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்துக்குமட்டுமல்ல எக்கிராமத்திலும், எப்பட்டணங்களிலும் செவ்வாயன்று அந்தோனியார்கோவில்களில் கூட்டமாகச் சனங்களைக் காணலாம். ஒன்பதுசெவ்வாய்கிழமைப் பக்திதான் இதன்காரணம். இப்பக்தி எப்படி ஆரம்பமானதுஎன்று கவனிப்போம். 1231-ம்ஆண்டு ஆனி 13-ல் லிஸ்பன் நகரில்உதித்த அர்ச். அந்தோனியார் ஆர்செலாஎனுமிடத்தில் மரணித்தார். அவருடைய பரிசுத்த தேகமானது 5நாட்களின்பின் பதுவைநகரிலுள்ள பிரான்சிஸ்கன்சபை மடத்துக்கோயிலான "சாந்த மரியா" எனும் ஆலயத்துக்கு ஒருசெவ்வாய்க்கிழமையன்று ஆடம்பரமாகக் கொண்டுவரப்பட்டது. அத்தருணத்தில் நடைபெற்ற ஏராளமானபுதுமைகள் செவ்வாய்க்கிழமையை அந்தோனியாரின் பக்திக்குரிய நாளாக்கிவிட்டன.

1617-ம்ஆண்டில் சிறந்த குலத்திலுதித்த ஒருஇளம்பெண் தீராதநோயொன்றினால் இல்லறவாழ்க்கையை அடையமுடியாமல் மிகவும் சஞ்சலத்துக்குள்ளானாள். இருந்தும் அர்ச். அந்தோனியாரில் நம்பிக்கையுள்ளவளாய் அவருடைய கோவிலைத்தரிசித்து மன்றாடிவருவாள். ஓர் இரவு அர்ச். அந்தோனியார் அவளுக்குத் தரிசனத்திலே தோன்றி, "நீ எனது ஆலயத்தை ஒன்பதுமுறை தொடர்பாகச் செவ்வாய்க்கிழமைகளில் தரிசித்து வா. இந்நாட்களில் பாவசங்கீர்த்தனம் பண்ணி, தேவநற்கருணைபெற்று வேண்டிவந்தால் உன்மன்றாட்டுத் தப்பாது கேட்கப்படும்" என்று கூறியருளினார். அவள் அவ்விதமேசெய்து தனது கண்டங்கள் தீர்ந்து இன்பமாக வாழத் தொடங்கினாள்.

இதன்மேல் இப்பக்தியை அனுசரிப்போர் எல்லோரும் அநேகவரங்களை அடைந்துவருகிறார்கள். கோடியற்புதரான அந்தோனியாரும் தாம் வாக்களித்தபடியே [illegible] ரை ஆதரித்து[illegible]

## அப்பா நீ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தினாள். அமலதாஸ் குழந்தையைப்போல் விக்கி விக்கி அழத்தொடங்கினான். மரியா பிரேமாவின் வாயைப் பொத்தி, "அப்படிச் சொல்லாதே அம்மா; அப்பா ரொம்ப நல்லவராய் மாறிவிட்டார்" என்றாள்... "அப்பா நிஜந்தானா அப்பா; நீங்க இனிக்குடிக்க மாட்டீர்களா?" என்றாள் பிரேமா. அமலதாஸ் எதிரே மாட்டியிருந்த யேசுவின் படத்தைப்பார்த்து: "சத்தியமாக இனிக் குடிக்கமாட்டேன்" என்றான். பிரேமா அப்பாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். மரியா ஆனந்தக்கண்ணீர் வடித்தாள்.

—நவாலியூர் நாயகி.



ஆசிரியர் க. வஸ்தியாம்பிள்ளை
அவர்கள்
அமரத்துவமடைந்த

## 1-ம் வருட மரணஞாபகம்

தோற்றம்: 14-2-1909 மறைவு: 21-9-1962

### மனைவி மக்கள் புலம்பல்

விலையினிலே மதிப்பறியா வைரம்போல
மினுமினுக்கும் சிறந்தருண விளக்கே! தந்தாய்!
உலையினிலே அரிசியைப்போல் உள்ளம்வேக
ஒராண்டாய்க் கண்ணருவி ஊறுகின்றோம்
அலையினிலே தனிப்பட்ட துரும்பேயானோம்
அன்புருவே! என்தலைவா! ஆணிப்பொன்னே!
நிலையிலா உடம்பதனை நீத்தாய்! எங்கள்
நெஞ்சினிலே நின்றென்றும் நீங்காயன்றோ!

"சீவியத்தில் இவரை நாம் நேசித்தோம்; நம்முடைய செபங்களால் கர்த்தரின் வீட்டுக்குள் இவரை நாம் இட்டுச் செல்லும்வரை கைவிடாதிருப்போமாக",

**சமாதானத்தில் இளைப்பாறுவாராக**

இவரது ஆன்மசாந்திக்காக எதிர்வரும் 2[illegible]-ந்தேதி [illegible]கிழமை காலை 6மணிக்குப் பரி. அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒரு துக்கப்[illegible]பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

துயருறும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

நம். 11, மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

✝

## 2-ம் வருட மரணஞாபகம்

எங்கள் சிருட்டிகரும், இரட்சகருமான சருவேசுரா! எங்களைவிட்டுப் பிரிந்துபோன **பிலிப்ஸ் அகஸ்தீம்பிள்ளையின்** ஆத்துமத்தை உமது பரிசுத்தவான்களின் திருக்கூட்டத்தில் சேர்த்து, அவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும், ஆமென்.

வாழ்விலே இவரை நேசித்தவர்களே!
மரணத்திலும் மறவாதீர்கள்

இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக 17-9-62 திங்கட்கிழமை காலை 6-30மணிக்கு [illegible] பைக்குளம் அர்ச். அந்[illegible] தேவாலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக்கண்ணுறும் சகலரும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரை இழந்து துன்புறும்
மனைவி:
ஜுவான்மேரி செல்லாச்சி.

மக்கள்:
செபஸ்தியாம்பிள்ளை, பிலிப்பிள்ளை, திரேசா ராஜமணி, மரியாம்பிள்ளை.

"பொன் அகம்"
வவுனியா.

## நள்ளிரவில்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யளித்தது. தேகத்தில் நடுக்கம் காணப்படவில்லை.

"ஏதோ ஒன்று என்னை மீண்டும் இங்கு இழுத்துவருகிறது. தண்டனைக்குத் தப்பிச்செல்ல யான் விரும்பவில்லை. காவலரிடம் என்னைக் கையளிக்கப் போகிறேன்." யூலியன் அமைதியாக, ஆயின் திடாரிக்கமாகப் பேசினான்.

"கடவுள்உன்னைக் காப்பாற்றுவாராக. நீ மிகுந்த துணிச்சலுடன் இதைச் செய்யவேண்டும். அதிக தைரியம் தேவை."

"தந்தையே என்னையிட்டு அஞ்சாதீர். கரங்களைச் சட்டைப்பையில் வைத்த வண்ணம் யூலியன் கூறினான். எனக்கு ஒரேயொரு கவலை. சுந்தரத்தின் துணைவியையும், சிறுவனையும் பற்றியது. அந்த இளம் குடும்பத்தின் இன்பக் கனவுகளையெல்லாம் சிதற அடித்துவிட்டேன்." விம்மி விம்மி அழுதான் இளைஞன்.

குரவர் யூலியனை நோக்கிநடந்தார். அவரது கரங்கள் அவனை மெதுவாக அணைத்தன. "நீதிமன்றத்தில் உனது வழக்கறிஞர் தண்டனையைக் குறைக்கும்படி வாதாடுவார். எனது சாட்சியத்தில் உனது முந்திய சன்மார்க்க சீவியத்தைப்பற்றிக் கூறுவேன். உனக்கு மரணதண்டனை கிடைக்குமென யான் கருதவில்லை. சிறைவாசம் முடிந்தபின்னர் சுந்தரத்தின் குடும்பத்தைக் காப்பாற்றுவது உனது பொறுப்பு."

யூலியன் எதுவுமே பேசவில்லை.

"விளக்கமறியலில் நீதனியாக விடப்படுவாய். அப்போது சாத்தானின் சோதனைகள் அதிகமாயிருக்கும். உன்னையே கையளிப்பதால் உன்து வருங்கால வாழ்வு பாழடிக்கப்படுமெனச் சாத்தான் சுட்டிக்காட்டுவான். புதுமனைவி, இன்பமான குடும்பம், ஆனந்த வாழ்வு எல்லாம் அழிந்துவிடுமென நீ கருதுவாய். ஆகவே, உன் சாட்சியத்தை மாற்றிக்கொள்ள, குற்றவாளியல்லவென்று வாதிக்க உனக்குத் தைரியம் உண்டாகும். அத்தருணங்களிலெல்லாம் நீதிக்கு—தண்டனைக்கு ஒருபோதும் தப்பிச்செல்ல இயலாதென்பதை நினைத்துக்கொள்."

குற்றவாளி மெதுவாகத் தலையை அசைத்தான்.

"எனது விசாரணைக்குட்பட்ட இளைஞனொருவன் இவ்வித நிர்ப்பாக்கியத்தை அடையநேர்ந்ததையெண்ணி மிகமிக வருந்துகிறேன். ஆயின் உனது பாவங்கட்காக நீயே உத்தரிக்க வேண்டுமென்பதை மறவாதே. பண்புள்ள ஒரு மனிதனாக உன் தண்டனையை ஏற்றுக்கொள்."

யூலியன் ஒரு விநாடி குரவரை உற்று நோக்கினான். பின்னர் மேசையை நோக்கி நடந்தான். தொலைபேசியைக் கையிலெடுத்தான். சில இலக்கங்களைத் திருப்பினான்.

"பொலிஸ்ஸ்டேசனா? யூலியன் பேசுகிறேன். இன்றிரவு பத்தரை மணியளவில் சுந்தரம் என்பவரைக் கொலைசெய்துவிட்டேன். இப்போது கத்தோலிக்க ஆலயத்தில் கட்டளைக்குரவர் மரியதாசருடன் உங்களுக்காகக் காத்திருக்கிறேன். நீங்கள் வந்து என்னைக் கைதுசெய்யலாம்."

சா. பெ.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நள்ளிரவில் வந்த தரிசகன்

பேயும் உறங்கும் நள்ளிரவு. பேச்சு மூச்சற்ற நடுநிசி. அக்கிராமம் முழுவதும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. ஆலயத்தின் அண்மையிலிருந்து பங்குக் குருவரின் இல்லத்தில்மட்டும் விளக்கொளி தெரிந்தது.

உயர்ந்து வளர்ந்த மணிக்கூண்டுக் கோபுரம் மரியாயே வாழ்க என இன்னிசை எழுப்பிற்று. பங்குவிசாரணைப் புத்தகங்களில் கண்களைப்புதைத்துக் கொண்டிருந்த குருவர் மரியதாசன் சிறிது திரும்பினர். டங்...டங்... டங் - மணி பதினொன்று.

நேரம்போனதே தெரியவில்லைஎன அவரது உதடுகள் கூறின. விழிகளில் தூக்கக் கலக்கம். வலது கரம் புத்தகத்தை மூடச் சென்றது. ஆயின்...? கதவில் யாரோ தடவுவது போன்ற சப்தம். நிமிர்ந்து நோக்கினர். அந்த அகாலவேளையில் வருபவர் யார்? கடைசித் தேவதிரவிய அனுமானம் கொடுப்பதற்காகக் குருமாரை அழைத்துச்செல்பவர்கள் கதவில் பொருத்தியிருக்கும் மணியை அடிப்பது வழக்கம். அல்லது தங்கள் வருகைபற்றிக்குரல் கொடுப்பர். தூாகிதமாக கதவைப் பிறாண்டுவது ஏன்?

ஒருமுறை தமது அறையைச்சுற்றி நோக்கினர் குருவர். அங்கு திருடிச் செல்வதற்குகந்த விலைபெற்ற பொருள்களெதுவும் இல்லை. அவர் அஞ்ச வேண்டிய காரணங்கள் எதுவுமில்லை. ஒரு முடிவுக்கு வந்தவர் கதவைநோக்கி நடந்தார். அவரது கரங்கள் அமைதியாகக் கதவுக் குமிழியைத் திருப்பின.

ஒரு மனிதன் திடீரென அறையினுள் நுழைந்தான். பயங்கரமாகக் காட்சியளித்தது அவன் தோற்றம். நடுங்கும் கரங்களால் கதவைப்படீரெனச்சாத்தினன். "நான்தான் சுவாமி" ...ஒட்டியுலர்ந்த அவனது உதடுகள் முணுமுணுத்தன.

பழகிய குரலாக இருந்தது. குருவர் சிறிது சிந்தித்தார். மீண்டும் உற்று நோக்கினர். "யூலியன்...நீயா.... என்ன விசேஷம் யூலியன்...ஏன் நடுங்குகிறாய்?"

"நான் துன்பமொன்றில் சிக்கியுள்ளேன் சுவாமி. ஆம், பயங்கரநிகழ்ச்சியொன்றில் சம்பந்தப்பட்டுவிட்டேன்."

"யூலியன் இதோ இங்கு உட்கார். உனக்கு என்ன நேர்ந்தது? விபரமாகச்சொல்"என அன்புடன் மொழிந்தார் மரியதாசர்.

அந்த இளைஞன் ஆசனத்தில் அமரவில்லை. மேலும் கீழுமாக உலாவினன். விளக்கொளியில் அவனை உற்று நோக்கினர் குருவர். கலவரமடைந்தவனுக் காட்சிதந்தான் யூலியன். "தம்பி கலங்காதே நடந்ததைக் கூறு" என மீண்டும் வினவினர்.

உலாவியவன் சிறிது தரித்தான். கிறிஸ்துவின் அடியவரை உற்றுநோக்கினன். "யான் ஒருவனைக் கொன்றுவிட்டேன் சுவாமி" எனப்பயங்கரமாக அலறினன். குருவர் அலட்சியமாகத் தலையசைத்தார். நடக்கக்கூடியதல்ல என அவரது வாய் மெதுவாகக் கூறியது.

யூலியன் குருவரை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தான்; பின்னர் அவரை நோக்கினன். "தந்தையே யான் குடிபோதையில் உளறவில்லை. உண்மையைத்தான் கூறினேன். ஆ! எவ்வளவு பயங்கரம்? என உடலெல்லாம் நடுங்குகிறது. என்ன செய்வதென்பது தெரியவில்லை. எனவே, உங்களிடம் வந்துள்ளேன்."

"யூலியன் இந்தக் கதிரையில் உட்கார். நடந்தவற்றை விளக்கமாகக் கூறு."

"சுந்தரம் ஒரு வர்த்தகநிறுவனத்தின் விற்பனைவுப் பிரதிநிதி. அந்த நிறுவனத்துடன் போட்டியிடும் மற்றொரு நிறுவனத்தின் பிரதிநிதியாக யான் கடமையாற்றுகிறேன். எனது வாடிக்கையாளர்களிடமெல்லாம் சுந்தரம் யான் செல்வதற்கு முன்பே சென்றுவிடுகிறான். திறமையாக வர்த்தகம் நடாத்திவிடுகிறான். இதனால் அவனைப் பகைத்துவந்தேன். அண்மையில் 50,000 ரூபா பெறுமதியான ஒரு வீடு விற்பனைக்கு வந்தது. எனது சாமர்த்தியமனைத்தையும் பிரயோகித்தேன். ஒரு வாடிக்கையாளரைத் தேடிப்பிடித்தேன். அந்த வீட்டை விற்றிருந்தால் யான் 5000 ரூபா கமிஷனாகப் பெற்றிருக்க முடியும் தந்தையே."

சரி, சிறிது தரித்தான் யூலியன்.

"அப்புறம் என்ன நடந்தது?"

"சுந்தரம் அந்த வாடிக்கையாளரிடம் சென்றான். ஏதேதோ பேசினன். என் வியாபாரத்தைக் கெடுத்துவிட்டான். செய்தியை அறிந்தேன். என் நரம்புகளில் முறுக்கேறின. ஆத்திரத்துடன் வெளியேறினேன்."

"நேரே சுந்தரத்தின் இல்லத்துக்குச் சென்றாய். வார்த்தைகள் வளர்ந்தன. ஆத்திரமும், அவமானமும் உனது உணர்ச்சிகட்குச் சூடேற்றின. அப்படித்தானே யூலியன்?"

"ஆம் தந்தையே என்வாழ்வில் என்றுவது இவ்விதம் யான் கோபமடைந்ததில்லை."

"அது உண்மைதான் யூலியன். உன்னைச் சிறுவயதுமுதல் அறிவேன். ஆத்திரத்துக்கு அடிமையானதை யான் கண்டதில்லை."

"உண்மைதான் சுவாமி. வார்த்தைகள் தடித்தன. வாய்ச்சண்டை முற்றியது. இருவாது கைகளும் கலங்தன. சுந்தரம் என்னைவிட வல்லவன். தாங்கமுடியவில்லை என்றால், யான் பலமிழக்குமுன் ஏதாவது செய்ய வேண்டும். என்னைக் கீழேதள்ளினன். பின்னர் என்மீது பாய்ந்தான். லாவகமாக நகர்ந்தேன். கீழே விழுந்தான் சுந்தரம். அவசரமாக எழுந்தேன். என்காத்தில் ஏதோ தட்டுப்பட்டது. அது ஒரு விளக்குத்தம்பம். சிந்திக்க அவகாசமில்லை. என்பலமெல்லாம் கூட்டி விளக்குத் தம்பத்தை உயர்த்தினேன். ஒரே அடி." அப்புறம்...... விம்மி விம்மி அழுதான் அந்த இளைஞன்.

"நல்லது. சுந்தரத்தின் உயிர் பிரிந்துவிட்டதா? அவன் இறந்துவிட்டானென நிச்சயமாக்கிக்கொண்டாயா?"

"அவன் மரித்துவிட்டான். இது நிச்சயம். மூச்சுவருவது நின்றுவிட்டது. இல்லாவிடில் ஒரு மருத்துவரைக் கொண்டுபோயிருப்பேனே."

"உன்னையாராவது காணவில்லையா?"

"அந்த இல்லத்தில் யாருமேயில்லை. சுந்தரத்தின் துணைவியும் சிறுவனும் திரைப்படம் பார்க்கச் சென்றிருக்கிறார்கள்."

"சுந்தரம் குடும்பஸ்தனா?"...... சுவாமியாரின் வினவில் சிறிது கடுமை தொனித்தது.

"தந்தையே உங்கள்குரலின் கடுமையை என்னால் உணர முடிகிறது. அவர்களின் ஒளியை, ஜீவனின் ஊற்றை யான் அவர்களிடமிருந்து பிரித்துவிட்டேன். அந்த இளம் குடும்பத்தின் எதிர்காலம்பற்றிச் சிந்திக்கிறீர்கள். ஆமாம் எனது வருங்காலமெவ்விதம்?" தலையைக் கரங்களால் தாங்கிப் பிடித்துக்கொண்டான் அந்தக் குற்றவாளி.

"பொலிசாருக்கு இக்கொலைபற்றித் தெரிவித்தாயா?"

யூலியன் கடுமையாக குருவரை நோக்கினன். "அந்தத்தவறை யான் செய்யவில்லை. உடனடியாக என்னைக் கைதுசெய்து காவலில் வைப்பர். அதையான் விரும்பவில்லை."

"காவலரிடம் [illegible] ல்லாம் என நீ கரு[illegible]?"

"ஆம் நான் தப்பிச் சென்றுவிடுவேன். விரைவாக இந்தக் கிராமத்தை விட்டுச் செல்வேன். எனது இல்லத்துக்குச் செல்வதை யான் விரும்பவில்லை."

"உனது தந்தையிடம் இச்சங்கதிகளைக் கூறினையா?"

"இல்லை. அது அவரை வருத்தும். அந்த அவமானத்தை அவரால் தாங்கவியலாது. காலஞ்சென்ற எனது அன்னையை இப்போது நினைக்கிறேன். முதல் தடவையாக அவளது இறப்பையெண்ணி மகிழ்கிறேன்."

"ஆம். அவள் இப்போதிருப்பின் இச்சஞ்சலம் அவளைக் கொன்றிருக்கும்." குருவர் வெகு அமைதியாகப் பதிலளித்தார்.

"தந்தையே யான் இப்போது செய்வதென்ன? அதையெண்ண என் சிந்தனை குழம்புகிறது. எனவே தங்கள் ஆலோசனையை வேண்டுகின்றேன்.

"என்ன செய்யவேண்டுமென்பதை நீயே தீர்மானிக்கவேண்டும். எடுக்க வேண்டிய நடவடிக்கை யாதென நீயே அறிவாய்."

"நான் பிறதேசம் செல்லவேண்டுமெனக் கூறுகிறீர்கள். இல்லையா தந்தையே? ஆனால், விசாரணையின்போது என்னைத் தேடுவார்கள். பதுங்கியோடும் பிராணிகளைப்பிடிப்பவர்கள் போல என்னை வேட்டையாடுவார்கள்."

"எனது பேச்சைத் தவறாகக் கருதுகிறாய் யூலியன்; நீ செய்ததுமாபெரும் துரோகம். அதற்குரிய தண்டனையில் நின்று தப்புவதெப்படி என்று மட்டுமே எண்ணுகிறாய்."

"அவனைக் கொல்லவேண்டுமென யான் விரும்பவில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இந்தப்பாதகத்தில் என்னை மாட்டிவிட்டன."

— சா. பெ. —

"எதுவிதமோ நீ அவனைக் கொன்றுவிட்டாய்."

தந்தையே கோபவெறி "என்கண்களைக் குருடாக்கிவிட்டது. ஆத்திரத்தில் அறிவிழந்து செய்த ஒருசெயலுக்காக மழுவர்வசம் என்னை, நானே ஒப்படைக்கவேண்டுமெனக் கருதுகிறீர்களா?"

"உனது பாவங்கட்காக உத்தரிக்க வேண்டியது உனது கடமை. உலக தண்டனைக்கு நீ தப்பலாம். ஆயின் இறைவனின் முன்னர் கணக்குக் கொடுக்கவேண்டியே நேரும். தண்டனையிலிருந்து தப்புவதென்பது முடியாத கருமம்."

"தந்தையே, நான் அதை நன்குஅறிவேன். ஆயின் ஒரு மனிதனிடமிருந்து அளவுக்கு அதிகமாக எதையும் எதிர்பார்க்க இயலாது."

"யூலியன், நாங்கள் தேவனின் சந்நிதானத்துக்குச் செல்வோம். ஆங்கு ஆண்டவன் முன்னிலையில் உனது பிரச்சனைகளைக் கூறு. என்னிலும் பார்க்க, என்னையும், உன்னையும் படைத்த இறைவனே நீ இனிமேல் செய்ய வேண்டியது எதுவென்பதைக்கூற அதிக தகுதிவாய்ந்தவர்."

மணிக்கூண்டுக் கோபுரத்திலிருந்து மீண்டும் மரியாயே வாழ்க என்ற ஓசை. ஆம் மணி பன்னிரண்டு. எங்கும் ஒரே நிசப்தம். கன்னங்கரேலென்ற இருள். இரு உருவங்கள் குருவரின் இல்லத்திலிருந்து புறப்படுகின்றன ஆலயம் நோக்கி. கொலைக்களத்துக்குச் செல்லும் குற்றவாளி போல முதல் உருவம் அடிமேலடியெடுத்து வைக்கிறது. அமைதியாகப் பின்தொடர்கிறது அடுத்த உருவம்.

சுவாமியார் ஆலயத்தின் பக்கக்கதவுகளிலொன்றைத் திறந்தார். பீடத்தின் முன்னிலையில் அணையா விளக்கு சிற்றொளி வீசிக்கொண்டிருந்தது. முன்வரிசை ஆசனமொன்றில் முழந்தாளில் வீழ்ந்தான் யூலியன்.

"இறைவனுடன் உனது பிரச்சனையைக் கலந்தாலோசி. சக்கிறிஸ்தையில் உனக்காகக் காத்திருப்பேன்." வண. மரியதாசன் அடிகள் சக்கிறிஸ்தைக்குச் சென்றார். தமது ஆசனத்தில் முழந்தாளிட்டார். ஜெக்சமெனியில் நமதாண்டவர் அனுபவித்த வேதனைகளை எண்ணினர். அதே அவஸ்தைகளுடன் அல்லலுறும் அந்தக் குற்றவாளிக்காக நீண்டநேரம் பிரார்த்தித்தார். இது யூலியனுடைய பிரச்சினைமட்டுமல்ல, குருவருடையதுந்தான். யூலியன் நீதிக்குத் தன்னைக் கையளிக்கவேண்டும். இல்லையேல் கொலைக் குற்றவாளிபற்றிக் காவலருக்குத் தெரிவிக்காத குற்றம் குருவரையும் சாரும்.

காலடிச் சப்தம் கேட்டது. குருவர் உற்றுநோக்கினர். யூலியன் வந்துகொண்டிருந்தான்.

"தந்தையே, சகலத்தையும் சிந்தித்தேன். ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். என்னைக்காவலரிடம் ஒப்படைத்தல் முடியாது. அது அவமானகரமானது; பயங்கரமானதுகூட. அப்பொழுதே யான் புறப்பட்டிருக்க வேண்டும். நல்லது, என்னைப்பற்றிக் காவலரிடம் கூறுவீர்களா?"

"யூலியன்! நான் தகவல் அதிகாரியல்ல, எல்லோருக்கும் செய்திகளைப் பரிமாறிக்கொள்ள; ஆனால், ஒன்று; தண்டனைக்குத் தப்பியோடுகிறாய்! இறைவனிடமிருந்து தப்புவாயா?" ஏக்கம் நிறைந்த முகத்துடன் சுவாமியார் அவனை நோக்கினர்.

"எனது சிந்தனையை மீண்டும் கலக்காதீர்கள்; என் தீர்மானத்தை மாற்ற முடியாது; சென்றுவருகிறேன்; நீங்கள் மீண்டும் என்னைக் காணமாட்டீர்கள்" சிறிதுதைரியத்துடன் பேசினன் யூலியன்.

கதவை நோக்கி நடந்தான் அந்த இளைஞன். சுவாமியாரின் குரல் அவனை நிறுத்தியது. "உன்னால் கொலையுண்டவனுடைய குடும்பத்தின் கெதியென்ன?" குருவரின் குரலில் கடுமை தொனித்தது.

"யான் அதை மறக்கவில்லை." யூலியன் பையிலிருந்து ஒரு காசோலையை எடுத்தான். அதைக் குருவரிடம் கொடுத்தான். திருமதி சுந்தரத்தின் பெயருக்கு ஐயாயிரம் ரூபாய் எழுதப்பட்டிருந்தது. ஒரு கணம் அதை உற்று நோக்கினர். பின்னர் நிமிர்ந்து யூலியனைப் பார்த்தார். அவன் அங்கு இல்லை. அப்போதே போய்விட்டான்.

கதவைச்சாத்திய குருவர் தமதில்லத்தை நோக்கி நடந்தார். தேவனே, யூலியனுக்கு மனமாற்றத்தை அளியும். நல்லாலோசனை மாதாவே, தப்பியோடும் குற்றவாளிக்கு நல்ல புத்தியைக் கொடுத்தருளும் என அவரது வாய் முணுமுணுத்தது.

மரியாயே வாழ்க... டங்... மணி ஒன்று. குருவரின் விழிகளில் தூக்கக் கலக்கம். சிந்தனையில் ஓராயிரம் பிரச்சனைகள். படுக்கைக்குச் செல்ல எண்ணினர். ஆயின், அழைப்பு அலறியது. குருவர் கதவைத் திறந்தார். அங்கு யூலியன் நின்றுகொண்டிருந்தான். அவனது முகம் அமைதியாகக் காட்சி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sutarbay Septemder 15-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org